உ

பரமபதிதுணை.

புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய,

கற்பம் 300.

முதற்காண்டம் 100.

கோழிக்கொடி,
ஸ்ரீமது: வாலையானந்த சுவாமிகள்
பரம்பரை
அயிராவதநல்லூரிலிருக்கும்,
முத்துராமலிங்கக்குருக்கள்
என்ற
வாலையானந்தகுருசாமிகள்
குமாரர்,
நமசிவாயக் குருக்களவர்கள்
எட்டுப்பிரதியின்படி,

மதுரை வித்வான்
த. குப்புசாமிநாயுடு அவர்களாற்
பரிசோதித்து,

மதுரை, புதுமண்டபம் புத்தகஷாப்,
இ. ராம. குருசாமிக் கோனார்
அவர்களாற்றமது
மதுரை வடக்குமாசி வீதி,
ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையிற்,
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1923 [

2-0-0

உ

புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

கற்பம் 300.

முதற்காண்டம் 100.

மதிரவி யொளிபெற் றிலகு செஞ்சடையில்
    மலரிதழ்க் கமலமாயிரத்தெண்
மவுனகே சரியென் றிட்வலம் புரியும்
    மாதவத்தோர்களும் பணியும்
அதிவித அண்ட சிகரகோ புரத்துள்
    ளமுதசஞ் சீவியாம் வழலை
ஆதியுமந்தம அருபமாஞ் சொருப
    மதிலுதித் திடும்பாஞ் சுடரை
நிதியதாய்க் கும்ப முனியெனக் குரைத்த
    நிராமயப் பொருளறி நூறும்
நிகழ்த்தவெள் ளோட்டிற்பதி னெண்பேர்மறைத்த
    நிர்மலக் கருவுகள் நாலுந்
துதிபெற விளங்கும் சுழிமுனை திறக்குஞ்
    சுகாதித கற்பசாதனையாஞ்
சூஸ்திர மிந்நூல் புலஸ்திய ருளுஞ்
    சுருதிவாருதியெனுங் காப்பாம். (1)

வாருதி கமலமதி தரி சனமா
    மைவரைக் கருத்தினை விளங்க
வசனமா யுணரத் தைமுத லுதயம்
    வளர்பிறை யனுதினக்காலம்
பேருறுங்கும்ப முனியடி தொழுது
    பிறைதிரி பிறையினின் றினமாய்ப்
பேணியோ ருறுதி வாலைபூ ரணத்திற்
    பிரபைசுந் திரவொளி பணிந்து
மேருறு சோம தியானமே யருள
    வினவுசி மகபவ தஞ்சும்
விபரம தாக வாசிகொண் டேத
    மெய்கண்ட தாரையி லடங்கப்
பாருறு சோம னிரவியிற் சேரப்
    பானமென் றருவியும் பாயும்
பற்பமாகதியு மிருகலை புரளப்
    பஞ்சாட்சர சரூபமும் நிவர்த்தி. (2)

நிவர்த்தியிக் கருவை யுலகமா னிடர்க்கு
நிகழ்த்திட நீள்புவிபனைத்தும்
நிகர்கயிலாச மிடங்கொளா ததீதம்
நெஞ்சமே யுனதருள்புரிந்து
உவரகத் திடினும் மனமகிழ்ந் தடக்கம்
ஒருவருங் கற்பசா தனையை
உணர்வறி யாத படிநினைந் தருள்வ
தாறுதிபெற் றனைதின முருத்தாய்த்
தவர்தலைத் தங்கள் தனிப்பிச காமற்
றசமெனு மாண்டுசெஞ் சரிக்கத்
தன்மயமறிய வாண்டுவோன் றமுரி
சாரணை சரம்பொழிந் ததுபோல்
அவரவ றிந்து அமுதசா தனைகொண்
டம்புவி மனிதரை யனுகா
தகலவுந்தனியே அனுசரி யாம
லமுரியுண் டதிசயமறிந்தே.

உண்ணுவ ததீத வுவமையோன் றுறுதி
யுனதுள்நின் றிலகுமிக் கருவை
ஓதுவதாகி யந்தமு முனதுள்
ளொளிப்பது மொன்றிலை யகத்திற்
பண்ணுமா மறையோ ரருளுப தேசம்
பகரவுங் குருவினை யடுத்துப்
பன்னிரண்டாண்டு நடுவணை யமுரி
பயின்றுமே காட்சரமிதனை
எண்ணும்வார்த்திகமா யேத்தியே காத்தி
லிருவினை யொழிந்திட விவையும்
இயல்பெனுங் கோச விந்துவந் திலகும்
இருவினை யுடனருள் சார்ந்து
ஒண்ணவுந் தனதாய் ஒருமன தாகி
யோடுவ தமுரிமுன் னிலைவிட்
டொருதரம் பிடித்து நடுவணை யுட்கொண்
டுருச்செபி யகமிது தாமே (4)

அகரமிவ் வெழுத்தோ டாதியாய் விளங்கும்
அழுரியே தினந்தின மருள
அரன்சிர சிதுவென் றறியும்நா தாக்க
ளடர்ந்துசூழ் சடைமுடி கோசம்
வகரதாரணத்துந் தொழுதுடன் பணிவார்
மலர்முடி யாலய மதனில்
வசியகோ புரத்துள் சிவலிங்க மறியும்
மனிதர்க ளறிந்துமே யறியார்
புகலவு மெண்சா னுடலதுக் குள்ளே
புவியெலாங் படைத்தரட்சகனைப்
புகழ்ந்துமான் மழுவும் அறிவதும் புனல்தான்
பொறியெனுங் கதிர்மதி மண்விண்
செகமெனும் புவனங் கடலெனும் மேரு
சிவசெங் துகளொலா முதிக்குஞ்
சிவன்சடை யதனிற் கங்கைவைத் தொளித்த
சிவனெனு முபத்தமென் றறிவாம். (5)

உபத்தமா முருவி லோரிரு கருக்க
ளுதித்திடு முற்பனமுணர
உலகெலாம் படைத்த அகாரமே விந்து
ஊசிநீ ரெனுமது சாரம்
சுபகலே யருவி சாரமே அப்பு
சுகாதித மெனுமப்பு சலநீர்
சுருதியாஞ் சலநீர் சாரைவெண் ணரவங்
துய்யவெண் சாரையு மமுரி
இபமிலா தமுரி பஞ்சாக்ஷரமிதனை
யிடைவிடாமலுஞ் சமமாறி
யேற்றசா ரையுமோ ராண்மொ ழிடவும்
ஏறுஞ்சா ரணையினுற் சைலங்
தபவயி ராக்கியங் குருவரு ளதனுற்
சாரணை யிரண்டுட னுதகங்
தைலமென் றதனை யடிக்கடி மாறச்
சடலமுஞ் சித்திய தாமே. (6)

சித்தியெய் திடுமே வாண்டினிற் றேகஞ்
சேடமா திதமெலாம் வெளுத்துச்
சீறியே யரவ மூரிந்திடுஞ் சட்டை
தியக்கமில் லாமலும் வெளுப்பாய்ச்
சத்திய மிதுபார் தகைமையா யுர்ந்து
சங்கையில லாமலுஞ் சடலம்
சந்திரகாந்தப் பிரபைபோற் றோன்றும்
சாரையென் றமூரியின் வளப்பம்
வெத்தியாம் விந்துவிதரண விசிதம்
மிருத்துதா துகளுமே வலுத்து
வெகுவித விஷயம் மேலும்வே தாந்த
விவேகியா யுலகினில் வாழ்வாய்
சுத்தியாந்தேகம் அழிவதுமில்லையே
சுகாதீத வெகுவதி சயமாம்
சுருதியா யகாரம் அந்திசந் தியுமாய்ச்
சொல்மொழி யறிந்துகொண் டுணரே. (7)

உணர்ந்துசெங் கதிர்பார் முன்னமு ரியுமோ
ராண்டுகொண் டுறுதிசென் றதன்பின்
உகமையீ சாண்டி லடியெனு மூலம்
உகரமென் றறிமூலப் புளிதான்
இணையிலா தெனுமே உகாரமென் றதனை
யிருந்துவோ ருறுதியா யியம்ப
இதனையே துதித்துச் செபித்திடு முருவா
யிசைவதா யந்திசந் தியுமாய்த்
துணையதாய்ச் செபிக்க அகாரமாம் பீசந்
தோன்றியும் உகாரமே நாதம்
சூதமென்றறிய அகாரம் விந்துப்பு
சூட்சமிந் துப்பையு மறியார்
சுணையெனுந் துருசு புளிமூல மிதுதான்
சொன்னவிக் கருவதன் பேர்கள்
சுத்தமா மமூரி யுப்பது வாச்சு
சூதறிந்திப் பூவைச் சூட்டே. (8)

சூட்டிய மூலைப் புளியெனு மமுரி
தொடுத்திடும் நசிமசியிரண்டுந்
தோத்திரஞ் செபித்துக் துறையதாயுணரத்
துடியதாஞ் சருகுப்பு வனுக்கும்
சாட்டிய மிலேபார் சருகுப்புக் கட்டி
சங்கையில் லாமனுஞ் சுருக்குஞ்
சாக்ஷிதா னறியச் சருகுப்பை நீயுஞ்
சடமறிந் ததனைப் பாய்ச் சிடுவாய்
மாட்டிடு தினமும் மகிழ்ந்துநின் றுணர
மருகியே தேகமும் வனுக்கும்
மனதுறு தியினல் மவுனமாயுண்டு
வளமெனுங் காரமே சத்தி
ஆட்டியே வறுமை அணுகிடா திடினும்
அடிமூலம் உகாரசத் தியுமே
அனுதின மருந்தி நாதவிந் துணர
அற்புத தேகவச் சிரமே (9)

தேகவச் சிரமாய்ச் சட்டையொன் றகன்று
செடலமுஞ் சுடரொளி யதுபோல்
திருத்துவச் சிரமிட் டிழைத்திடுங் காயந்
தீயெனுஞ் சலமதுக் கசையா
பாகெமன் விலகித் தன்னுக்குட் டானுய்ப்
பரிபூர ணனந்த போதம்
பசுந்தமன் தண்ணீ ரமுரியும் புளிதான்
பளிங்குமா மதிரவி யொளியாந்
தோகசி கரமா யிருவிதக் கருவுஞ்
சுரோணித சுக்கில மிரண்டுஞ்
சூட்சபூ ரணமா யுனதுள்நின் றிலங்குஞ்
சுகாதிதப் பூரணத்தெய்வம்
ஆகமப் படியா னறிந்து பாய்ந் துணர
வதீதமாங் காமப்பால் விந்து
அகமதாய் விளங்குங் கானலின் பால்தான்
அற்புத காதமிக் கருவே. (10)

கருவெனு மமுரி விந்தகி சாரங்
கட்டிடுங் காரமும் வனுத்துக்
காரண மறிய காதத்தா லப்புக
கல்லது போலவு மிறுகும்
உருவெகு அகாரஞ் சிவமது வாச்சு
உகாரமுஞ் சத்தியுமாச்சு
உனதுள்நின் றிலகுஞ் சத்தியுஞ் சிவமும்
ஒருமையா யுகந்துவோ ருறதி
திருவெனு முதைய காலையில் நியமந்
தீர்க்கமாய் அகாரமே செபிப்பாய்
செபித்திடுமுதய காலமே அகாரம்
தீட்சையு மானபின் தெளிவாய்
மருவெனும் மாலை யதனிலே உகாரம்
வசனியும் உகாரதீட் சையதாம்
வரும்வினை காலன் மாண்டுபோய் நீருய்
வச்சிர காயம தாமே. (11)

வச்சிர காயஞ் சிவசத்தி யிரண்டின்
வகையறிந் தன்புபூண் டருளில்
வசியவை ராக்கியம் அதுவொரு மனதாய்
வாசியை வாவழைத் துள்ளம்
உச்சித மதுரெண் டறிந்துவொன் றறிந்து
யுக்தமா யிரண்டுமொன் றுவாய்
உட்டுயி ரிரண்டு மொருவழி யுளதா
யொருக்கடி கையுமே பிசகா
சச்சிதா னந்த சதாசிவ சம்புவைத்
சதா காலமும் பிரியாச்
சாரமே அகாரம் மகாரமே உகாரந்
தன்னுக்குட் டான்மகிழ்ந் திடினு
மச்சதோர் பொருளென் றறிந்ததோ டதுவாய்
மவுனம்வைத் துகந்து சாற்றிடினும்
வண்டர்தன் பிரானுந் தொண்டருக் கடிமை
யாகிடி லாதியா யமர்ந்தே. (1

ஆதியு மந்தப் பதவியிற் சேர்ந்தே
அருளில்நின் றற்புத நாத
வமுதமே யுண்டு காலையிற்சிவமு
மறிவது மாலையிற் சந்தி
நீதியாய் நெஞ்சம் நிலைதவறாமல்
நெறியதாய்க் கலைபிரி யாமல்
நின்றவன் வாதி கருத்துளா னெவர்க்கும்
நீதிமா னிடவரி லொருவன்
ஓதிய கற்ப முதலெனுந்தீட்சை
யோராண்டு அகாரமே செபித்து
உகந்துடன் காத்தே உன்மனங் கனிய
உகாரமே யிரண்டெனுந் தீட்சை
சோதிப்பிர காசந் திருவெனு மேறச்
சுகாதீத முருவெனு மேறச்
சூட்சும தேக மெய்திடும்பின்பு
சொன்மொழி யியம்பிட லாமே. (13)

மொழிவது மறிய அகாரமோ கோரம்
மூட்டியே கூட்டிப்பூ ரணமாய்
மூன்றுஆண் டதனி லிரண்டொன்றுப் மருவி
மூலமென் றமுதமே வுண்டால்
ஒழிவது விலகும் ஊழ்வினையகலும்
உடற்குள் வருத்தமு மொழியும்
உள்மூல வாசிச் சுடரில் நின் றிலங்கும்
ஓங்காரக் குண்டலி வசியம்
வழிவதா மமுதம் வாசியுஞ்சுடரில்
மருவியே அமுதமும் வடியும்
வச்சிர தேகம் மரணமு மிலைபார்
மனோன்மணி கிருபையு முண்டாம்
இழிவதுமில்லை யெப்பிரா னருளால்
ஏகமாஞ் சோதிப்பிர காசம்
இகபர மாயா காசமென் றதுவா
யிபம்பினர் முன்னவ ரினியே. (14)

இனியமா மூல மதனிற்காக் கொண்டே
 யெழுந்தண்ட வரையிலு லாவி
இந்துடன்மருவி யிதுபொருள் வாசி
 யிவையெனு மொடுக்கமெய் யடியை
வனிதருந் தாதி யமர்ந்திடு மட்டும்
 மண்டுமா காயத்தி லடர்ந்து
வையகந் தன்னில் மேகமாய்த் திரண்டு
 வகைபல வாகவே யிருந்து
மனியவே கரிய சாகரஞ் சூழ்ந்து
 வான்கதிர் மீளவு முயர்ந்து
மாறுகால் தூக்கிக் கதிர்மதி பெருமை
 மரக்காலைப் போல்வரு ஷித்துக்
கனியவவ் வுருவால் உவரது அகன்று
 களிம்பிலா மனுஞ்சுத்த சலமாய்க்
காருநீ ரதித சலமதாய்ப் பொழிந்து
 சழிந்தது பூமியில் விழுந்தே. (15)

பூமியி லிலகும் உயிர்பயிர்க் குதவி
 புவியெலாம் புனலது சொரிந்து
புவனமா திதமும் வாரிநீர் பொழிந்து
 புகழ்ந்துடன் செந்துகள் தழைக்க
வாமஞ் சொண் டவைகள் மதியெனுமமுரி
 மாறிட வுவரகற் றிடினும்
வாருதி நீர்போய் பளிங்குவெண் ணிறமாய்
 வருஞ் சுத்த சலமதுவாகிச்
சேரமநீ ரதுவாய்த் தெளித்துபுட்கரணி
 சுகாதித சிவகங்கை சூட்சஞ்
சுத்தவித் தெனவும் பொருளதாயறியச்
 சுயம்புமே தினியெலாம் படைத்துத்
தாமுமே விளங்குந் தரணியும் விளங்குஞ்
 சாட்சிகண் டிடுமகத் துகளுஞ்
சமுத்திரத் ததுநீர் நவசல மதுசெய்
 சாரநீரதுசுத்த சலமே. (16)

மேகவிந் தமுரி நீர்சுத்தசலமாய்
　　மிகுத்ததோர் சைலமென் றதுபோல்
விந்துநீ ரதுபோய் சைலமாய்ச்செனித்து
　　விரவிப் புவில்ரவி சேர்ந்தால்
வேகமே அதீதம் உகாரமில்வுருவாம்
　　வீழ்விந்து உகாரமுஞ் சேர
விருப்பமா முதகம் நீருமுப் பிதுபேர்
　　வினவுமுப் பதுரவி பிள்ளை
வாருடன் மதிவிந் தெனும் ரவிநாதம்
　　மதிரவி சாரமுங் காரம்
வருங்கார சாரம் இரண்டுமுன் னுருவில்
　　மகிழ்ந்துகொண் டதுதெளிந் திடுநீர்
யோகமாஞ் சத்திசிவந்தனைத் தொழுது
　　உறுதிவைத் தொருமன துன்துள்
உற்பவ மறிய மகார மாந்தீட்சை
　　யுடனவை யடக்கம் வைத்திடிரே. (17)

அடக்கம்வைத் தறிவில் மனந்தெளிந்தோர்கள்
　　அகலநின் றருள்தெளி யாதோர்
அம்புவி மாந்த ரனைவரி லொருவன்
　　அடுத்துமே குருவருள் காத்தோன்
கடக்கநின் றோர்கள் கருவறிந் தனர்கள்
　　கருத்தினிற் கற்பசா தனையைக்
கருவறியாதோர் கருத்துடன் குருவின்
　　கடாட்சமே கருணையா னந்தம்
கொடுக்கவுங் குளிர்ந்த குவிந்ததோர்மனமாங்
　　குளிரிலாக் கல்லுமே கல்லு
கூர்மையென் றதுகல் குளிர்ந்த கல்லுாணிக்
　　குறித்திட மவுனம தாகும்
வெடுத்திடா மவுன மெனுஞ் சிப்பித் தோடு
　　மிவையதை யடக்கம தாக
வெளிவரா திடினும் மிகவது சரித்து
　　விவேகமாய் வரவழைத் துணர்வாம். (18)

வரவழைத்ததனை தெளிந்தவரமுரி
மதிசுத்த சலமதிற் காய்ச்சி
மதிசலஞ்சுண்ட வதிதசுத் தியதாம்
மவுனமாஞ் சிப்பிதோ டெடுத்துத்
திரமெனுந்தீக்ஷை தசவரையாண்டு
செய்தவர் சருகனுசமனுய்ச்
சேர்த்துடனதற்குச் சரிநிகர் கூட்டித்
தெளிந்தவ ரமுரியா லாட்டிக்
குரைவருகாமற் காமப்பா லமுரி
குறித்துச்சொன் னவர்சிரந் தெரிக்குங்
குவலயமனிதர் வாசம்வீ சாமற்
குறித்துமை அரைத்துடன் மெழுகாய்
பரவசமிதுபார் வில்லையதாக்கிப்
பானுவென் றதீதமாய் ரவியிற்
பண்புடன் காய்ந்து பின்புநீ யதனைப்
பக்குவ மாயெடுத் திடுமே (19)

பக்குவமறிந்து அகலில்வைத் ததன்மேல்
பதியமே லோடது மூடி
பகர்ந்துமண் சீலை சந்துகள்தெரியாப்
பரிவுடன் செய்துபின் புடத்தில்
மிக்கவ மிலாமல் விளங்கிடுஞ் சாவல்
விபரமாய்ப் போட்டெடுத்ததனை
மிகுந்ததோர் குருவினருளினல் மலர்ந்து
மிகநிறந் துய்யவெண் வெளுப்பாம்
புக்குவ தமுரி மதிசலமதனிற்
புனலதிற் பணவிடை தாக்கிப்
புகழ்பெற வுட்கொண் டனுதினம் பூசி
புதுமையென் றுக்கையும் வலுக்கும்
இக்குவல யத்தோ ரிதையறி யாம
லிரந்துண்டு பொருளறி யாமல்
இயாவருந் திகைத்து இறப்பது சதமென்
றிருந்ததி னுலெமன் வினையே (20)

எமலபி யகற்று மிகபரங்காட்டு
மிளவயதாகிடும் நரைபோய்
இறப்பிறப்பகற்றுங் குருபரனருளா
லிகழ்ச்சியென் றெண்ணிடவேண்டாம்
உமையவளறிவா ளிமையவர் காண்பா
ருண்டிடு மமுரியிற்றுக்கி
உடனண்டபற்ப மெடுத்துப்பக் குவமா
யுறுதியாய் மண்டலங்கொண்டால்
நிமை நிமைத்திடும்போய் உன்னுடசரீரம்
நிகரிலாச் சட்டையும் உரிந்து
நிச்சயமிதுபார் நினைவதாய் நிகழ்ந்து
நீடூழிகாலமும் வாழ்வாய்
தமைகழிந் தாண்டில் அமுரியுண் டிடக்க
சடுகள்போய் வினையது அகலும்
தரித்திரம் நீங்கிக் கன்கமாஞ் சடலம்
சரித்திர மிதுகரு வாமே (21)

ஆகுமப் புவியி லாரறி வார்கள்
அண்டத்தின் கூறதி சயத்தை
ஆதியாமீச னருளிய கல்லுப்
பறிவதே அண்டமே மவுனம்
பாகமிவ் விதமாய் அடிநடு முடியும்
பகருஞ்செய் பாகமும் வகையாய்ப்
பகர்வது கவன முடனருள் காலம்
பலவர்த்த மானமுமுணரப்
போகியாகாமற் கருவுரு வதுயேர்
பூட்டிடுங் கருத்துமேபுகல
புதுமையாய்க் கெவுன கேசரத் தருளின்
புகழுடன் கிரிகைவிட்டகலா
சோகசிகரமாம் நிலைதவ ருமற்
றெழுதுட னிருக்கவுந் தலமுந்
தோத்திர மாகக் கவனமில் லாமற்
றெடுகுறி சங்கைக ளறிந்தே. (22)

சங்கைக ளனேக மதையெடுத் துணர்ந்து
தன்மையும் வண்மையுஞ் சகத்திற்
சாவதோ ரொளிப்புஞ் சாஸ்திர மறைப்புந்
தனையெலா மறியசூஸ் திரமாய்த்
திங்களு மதியும் சோமனும் நிலவும்
சிவனுமே சிரசில்வைத்தொளித்த
செகமெலாம்நிறைந்த சந்த்ரபுஷ்கரணி
செயலெலாம் வளமதாய்க் திருத்தி
மங்களம் புகழும் அகத்திய முனிவன்
மாட்டிய தவத்தினலருளும்
மனமகிழ்ந் தடியேன் புலத்திய னெனும்பேர்
வசனமா யிரத்தின்சூஸ் திரமாம்
கெங்கையென் றமுதஞ் சடைமுடி கோசம்
கிர்பாகர கிருபையும் விளங்கக்
கேசர மெனும்பேர் கற்பசா தனைநூற்
கேள்வியென் றறியுரை செய்வாம். (23)

செய்விதப் பரீட்சை திருத்தமாயருளச்
சித்தர்கள் பதினெண் பேரடுத்துச்
செய்குரு முனியால் அடியனுப்த்தொண்டு
தேறியே தெளிந்துருவாகி
மைவிழி யுமையாள் மலர்ப்பதம் பணிந்து
மதுர செந்தமிழினல் நூறும்
வசனமாய் ஞான வழியறிந் துணர்ந்து
மதியினற் கற்பசாதனைக்
கைவசப்படுத்திக் காயமே வலுத்துக்
கனகமாந் தேகம தாக்கிக்
காரமுஞ்சாரங் கருக்களின் சூட்சங்
கதிர்மதிக் கருத்தினையாய்ந்து
ஐவகைச்செயநீ ரமுரியென் றறிந்து
அமுதசஞ் சீவியால் மாறி
அகாரமென் றருளின் உகாரமே வலுத்து
அப்புவா அப்புக்கட் டுணர்ந்தே (24)

உப்பு வாலப்பு உவாதுநீக்கி
    உகாரத்தால் அகாரமே கட்டி
உடற்சச டகற்றி யொருவழிப் படுத்தி
    யூதிடுங் கண்டதா ரையினில்
அப்புவா லாவி யனுதினம் வாசி
    யகன்றுபோ காமலும் ரேசி
ஆவபூ ரகத்தி லடங்கிடு மாறு
    லடாங்குகும் பகத்தினி லொடுங்கி
இப்புவிதனிலே யிருந்துமே மூல
    மிதுநடு வணையினிற் கும்பித்
தியல்பெறக் கண்ட தாரையி லூதி
    யிசைவதாய் வசப்பட வாசி
முப்பது முடிய ஆண்டுபத் தாசான்
    முறைப்படி குருமுடித் துணர
முடிந்துவிச் சூட்சம் சித்தருக் குரைக்க
    முடியது வணங்கினே முணர்வாம். (25)

வணக்கப் வைத் தன்பாய் மகத்துகள் தொழுது
    வசனவை ராக்கிய மொருசார்
வடிதொழு தனேவோ ரிதுகரு விளக்க
    மறைபொருள் விரித்துதான் விளங்கும்
இணக்கமாய்த் துதித்து ஐவகைப் பொருளை
    யினமதாய்ப் பிரித்துரைத் திடுமென்
றிணங்கிடு மாசான அகஸ்தியர் கிருபை
    யெய்தவு மிருகரங் குவித்துக்
குணங்குறியாக வுபதேச மளிக்கக்
    குவட்டுசித் தர்களு மேகக்
குவவய மனித ரனைவரி லொருவன்
    குறித்துடன் கற்பங் கொண் டுணரச்
சுணங்கன்போ லடுக்கத் தவநெறி யாகச்
    சூட்சமென் றருள்திரு நடனந்
தொடுதறி காட்டி யெடுத்துநூல் கொடுத்துச்
    சுழிமுனை யறியவுஞ் சொல்வாம். (26)

சொல்வதோர் கற்ப சாதனை யதற்கே
    சுத்தபத் தியமதை யுரைக்கச்
சொக்குநல் லெண்ணெய் கடுகுமீ னிறைச்சி
    துப்புந்தாம் பூலத்தின் சுண்ணம்
கொல்லவந் திடுங்கள் ளபினிசா ராயங்
    கூத்தனுங் கோரக்கர் மூலி
கோழிமீயா டெருமைப் பாலும்நெய் புகையுங்
    கொங்கை மின்னார்களின் போகம்
அல்லொடு பகலும் மனதுசஞ் சலமும்
    அய்புவி மனிதர்க ளுறவும்
அதிநித் திரையுஞ் சோம்பலுங் கோபம்
    அகற்றியிவ் வழியெலா மகல
நில்லுமந் னெறியாய் நெறிதவறாமல்
    நினைத்திரு வதிகடைகூடா
நீபசும் பாற்பச் சரிசிபோ சனங்கொண்
    டினமதா யிருந்திட வியல்பாம (27)

இருந்திடப் பாசிப்பயறொடு மிளகு
    மினமதாய்ச் சீரகம் பசுநெய்
இயல்புளி யாரைக் கிரியவேம்பதுவு
    மிலைக்கொருக் காயதின் புளியும்
வருந்துசம் பழச்சார் புளியதின் தளிரும்
    வகுப்பது சிறுகீரை வழுங்கு
மதியில்நித் திரைபோய் ரவியில் நித்திரைசெய்
    மனது வைராக்கிய தவமாங்
கருதிடுமனதின் கசடது அகற்றக்
    கருணைகூர்ந்தருள் சொர்க்கபதமே
கருத்தது நிலைக்க ரவிமதி தீக்ஷை
    கடாக்ஷம் பெற் றய்சிவ பூசை
குருபரன் கிருபை அந்திசந்தியுமே
    குறைவருகாமலுஞ் செபிக்கக்
குறித்திடுஞ் சடலக் தீவினை யகற்றிக்
    கோபத்தீ பிரிந்துபோய் விடுமே. (28)

கோபாக்கினி யகன்று அங்கியுமதுபோய்
கூர்ந்துமெய் நிலைத்திடுமோகிற்
கூத்தனு மதிதான் திரோதகை யாகிக்
கொல்வரும் மாயையு மகனுந்
தபாதவம் நிலைத்துச் சிவவிந்து மமுரி
தான்திருச் சத்தியைப் பூசி
தவம்நிலைத் திடுமே காயசித் தியுமாஞ்
சருகிடா திருகற்பம் நிலைக்குஞ்
சபாசாப மகனுஞ் சதாசிவனெனும்பேர்
சடலமும் வலுத்துசா ரணையால்
சர்வசித் துகளும் எட்டெட்டு மாடுந்
தரணிமா னிடவரில் தசவாண்
டோமது அமுரி மலப்புளி யிரண்டாம்
உடல்வினை யகலுமுன் னிதமாம்
உலகமா னிடரும் இதையறி யாம
லுண்டதோர் அனமும் விட்டனரே (29)

அனைத்துமேபடைத்த சிவமது சலநீர்
அகாரமே அமுரியென் றிடலாம்
அறிவது சத்தி உகாரமென் றிடலாம்
அதீதமாம் புளியெனுமதுபேர்
புனலெனு மமுரிபொருந்திடாமலுமே
புவிதனில் மனிதர்கொண் டவமாய்ப்
புகலப் பத்தியஞ் செய்தனர் சடலம்
பொல்லாமை யால்வாயு மீறி
வினையதுசூழ விலக்கமா ட்டாமல்
விதமறிந் ததையகற் றுமல்
விந்துநீ ரகற்றி விவேகமு மறந்து
விழலதாய்ப் புலம்பியே பிணியால்
தனது புத்தியும்போய் சத்தியென் றறியார்
தரணியில் மாதர்கள் நாதஞ்
சத்தியென் றெனுமாய் மாதவி டாய்கொண்
டம்புவி தனிற்றயங் கினரே (30)

தயங்குமா ணுக்கர் அவனியில் மாதர்
    சைகையே செய்துமா தாந்தம்
தனையுணர்ந் துட்கொண் டதீதரோய் பிணிவந்
    தனலிறைற் சயமீளோ க்ரச
மியங்குவ ரதீதம் சடலமு மழிந்து
    மிகவினை சூழ்ந்து மாண்டிடுவார்
மீண்டிடா தழியா துண்டதோ ரமுரி
    விடாமலு முண்டுணர்ந் தோர்க்குத்
தியங்குவ திலையே தேகமு மழியாச்
    செலமன லதுக்குமே ஆசையா
திருத்தமா மூலப் புளியது வாகுந்
    தெளிவதோ ரமுரியுப் பாகும்
மயங்குவ திலையே புளியுட னுப்பு
    வகையறிந் துட்கொள வசனம்
வச்சிரதேகஞ் சிவனருட் சத்தி
    மதிரவி யெனவறிந் துணரே. (31)

அறிந்துமிப் பொருளை யசங்கிதப்படுத்தா
    தமுதமென் றிதையறி யாமல்
அடுத்துமே உட்கொண் டனுதின மறவா
    தாக்கையும் வலுத்துமே பலக்கும்
நெறியிது கற்பம முரியு மாதல்
    நிகழ்த்திட புளியுப் பிரண்டும்
நிசசத்தி சிவமா யிதுவுட லுயிர்தா
    னிவையறி பருதியு மதிதான்
பிரிந்திடா தெனுமே சுடரில்நின் றிலங்கும்
    பெருமைதான் கொடுமுடி பேதம்
பிரமாண்ட மாமேரு மதிகயி லாசம்
    பின்னுமே உரைத்திடப் பிசகா
தெரிந்திடு மண்டந் தனிற்சிவந் திருக்குந்
    தீயெனுஞ் சுடர்ஜெனித் திருக்குந்
திகைத்திடா திடினும் பூரணவழலை
    செய்தியாம் பிறந்தியாய்த் தனியே (32)

தனியதாய்ப் பிரித்து அகாரமாண்டொன்றிற்
சாதிப்ப தெனுமமைப் போனுய்ச்
சற்குருவெனப்பின் காண்டிற்சுடரைத்
தாக்கிப்பூ நீரதின் சமனுய்
இனியதாய்ப் பிசைந்து ரவிதனி லிருக்க
இளகிடும் ரவிமுகந் தனிலே
எம்பிரானருளா லியம்பிடவினிக்கே
ளெவர்களு மறிந்திடா மனுமே
கனிந்திடு மிதற்கு நிகரது வாக்க்
கற்பூரஞ் சரிசமன் கூட்டிக்
கருதியே காலிலொன் றிடுசாரங்
கலந்ததைக் கல்வத்தி லாட்டிச்
செனித்திடாததுபின் ரவிதனிற்றாக்கிச்
செவ்விதப் பதிசைகண் டினிக்கேள்
தீர்க்கமாஞ் சுடரு மெழுகது வர்குந்
தெளிந்திட்டீர் சுடரிதுவாமே. (33)

சுடர்மெழுகதனைச் சொல்லவு மெளிதோ
சூட்டும்பூ நீர்மூலப் புளிதான்
சுத்தயாய்ப் பத்தாண் டெகமையாய்க் கொள்ளச்
சுகாதிதச் சுண்ணமாய் மலருஞ்
சுடமதுக் கமுரி சாரம்பத் தாண்டு
தகைமையா யிரண்டு மூண் டிடவுந்
தபோபலத்ததனுல் வழலைபூ ரணமுந்
தனியெடுத் ததரவி படவே
புடமுழக் குகையிற் பொருமியே நீறும்
பூநீரும் புளியதுவாகும்
புனலது அமுரி கரியுப்பென் றிதன்பேர்
புகட்டினர் மறைபொரு ளாகப்
படாக முனதுள் ளிருகரு விளங்கும்
பாரினி லண்டக்கல் வழலை
பார்த்திடு வெளியிற் சமாதிவைத் திருந்த
பக்குவ மிதுமூன்று முப்பே. (34)

முப்புவின் திடத்தில்,முடிந்துமே யிருக்க
மூவுல காதித மனைத்தும்
மூடமாய்த் திரிந்து அலைந்திடும் பேய்போல்
மூப்பூவை யறிந்திட லாமோ
செப்பவொ ண்ணாது செகதலத்தோர்க்குச்
செப்பினுற் செய்கைபொய்ப் படுத்துஞ்
செகந்தனிற் சுணங்கன்போற் றிரிந்தோர்க்குச்
சிவவிந்து நாதமுந் தெளியா
இப்படி யெண்சா ணில்லத்தி லிரண்டு
மிருப்பதும் வெளியில்லான் றிருக்கும்
இதுவெகு புதுமை யாவரு மறியா
ரேங்கியே வாதமுஞ் சுடுவார்
வெப்படி மூன்றும் விளக்கொளிபோல
விளங்கிடி லிதுகுரு வாகும்
வெறிபிடித் தவர்போல் மேதினி தனிலே
வேடம்பூண் டிருந்துமாண் டனரே. (35)

மாண்டிடா மனுமே வழலைமுப் பொருளின்
வகையறிந் தறிவினில் மகிழ்ந்து
மதிபெறுஞ் சரிதை வழியிது சிவமாம்
வளர்பிறை சிவத்தின்கூ றெனலாங்
காண்டிப மிதுபார் கிரிகைசத் தியதாங்
கருத்தறிந் திதனுடகூறு
கனயோக ஞான வழியெனு மறியக்
கற்பமே சத்தியுஞ் சிவமாய்ப்
பூண்டிடுஞ்சத்தி சிவபூசை மார்க்கம்
பொருந்திடும் ஞானயோ கத்திற்
புகழ்பெருங் கமலம் பூரண வழலை
பொரிபெனுஞ் சுடரதே மவுனம்
ஆண்டுபத் தெனவும் அமுரியும் புளியு
மானபின் சுடரண்ட வழலை
அதீதமா மெழுகு சமாதியோ கத்தி
லறுசுவை யகற்றியுண் டனரே. (36)

அறுசுவை யகற்று காயமா மெழுகு
அமுரியி லனுவள வருந்த
ஆண்டிரு பதமாய் ஆவியின்பா லொன்றை
அனுபவித் திடமரி தரிது
சொருபசித் தியதாஞ் சுடர்மெழு கதனாற்
சூட்சம சித்தியாஞ் சொன்னேஞ்
சுகாதீதச் சடலம் வலுத்துமே யிருக்குஞ்
சுழிமுனை திறந்திடு மவுனம்
பரவச மிதுபார் தவமது யிருத்துஞ்
பரவச மிருத்திடும் ஞானப்
பரப்பிரம்ம வாசி நிலைத்துகுண் டலியிற்
பராபரன் தரிசின மெய்துந்
திறவுகோல் நந்தி யொளிவின்கூ றதனாற்
றுய்யவெண் ணமுதமாஞ் சரீரஞ்
சோதியாய் விளங்கும் தேவனென் றெனும்பேர்
சுத்தமெய்ஞ் ஞானியென் றறியே. (37)

சுத்தனு யுலகிற் கற்பசாதனையாற்
சூக்ஷமப் பொருளதை யறிந்து
சுகவசீ கரமா யுலகிற் சித்தாடச்
சுட்டெனுங் கல்லுப்புச் சுண்ணம்
வித்துவிங் ததீத வுப்புடன் புளியும்
மெய்யினி லறிந்துபின் வெளியில்
வேகமென் றதீத அண்டக்கல் லுப்பின்
விபரமாய்ப் பரித்துயானருள
சத்துடன் சித்தா னந்தசித் ததீத
சர்வமா தீதமுஞ் சரமாய்ச்
சாக்ஷிநூற் பிறழாத் தகைமையா யுணரச்
சண்டனு மணுகிடா திருக்க
உற்றதோராதி யந்தமா யிலகு
முதித்திடு மாதியு மந்த
உவமையவ் வுருவில் அண்டபிண் டமுமா
யுருவினை யின்னதென் றுரைப்பர்ம். (38)

இன்னதென் றுரைக்க யினியண்ட பிண்ட
மிதுக்குப்பேர் நாதவிந் தெனினும்
இதிலொடுங் கிருப்ப தெனுக்தல மறிய
இகபர வெளியினி லிருக்கும்
உன்னுனே பரமா யுலாவிடு முயிர்தா
னொடுங்கிடும் போதுயி ருனேவிட்
டொருளோயா முலகில் ஊமையென் றறிய
உவமையெப் படியெனி லுரைக்க
அன்னமே பரமாய் அண்டமென் றதுவாய்
ஆதியுப் பரியவும் முடிவாய்
அந்தவுப் பதுவாய் அதுகல்லுப் பதுவாய்
அறிசிரந் துய்யவெண் ணிறமாய்
சொன்னசொற் பொருளாய்ச் சுத்தகல்வெளுப்பாய்ச்
சோதியாய்ப் பரப்பிரம மதுவாய்ச்
சுடரதாய்க் கமல கபாடமோ டதுவாய்ச்
சுதனர னமுதெடுத் துணர்ந்தே (39)

எடுத்துண ரமுது இனியுல கத்தி
லிடறுவா ராமலு மிருந்த
யீசனுண் டடவை யிதனைப் பேசாம
லிதனுட பெருமையென் றதனல்
தொடுத்தன ரீசனெ னும்பிர பல்யக்
தேயக்திடுஞ் சொரூபசித் தியினுற்
சுந்தரப் பேர்கொண் டதிசய மிதனைச்
சொல்லவு மெளிதேநா விலைபார்
அடுத்துமே நீச்சு அதிதநீச் சாகும்
அண்டத்தின் கூறினை விளங்க
அண்டக்கல் வெளுமை அதலரினுள் வழலை
யருவுரு கருச்குரு வாகுஞ்
சடத்திலுண் டான சாரத்தின் புளியைத்
தலைசிர சதுமுடி காரய்
தனிக்குரு வருளின் பரகுரு வண்ட
சாதனை யினியுரைத் திடவே. (40)

உரைத்திடும் வழலை முறைதனை விளங்க
உற்பன மெனும்பரா பரமாம்
ஒளியெனு மண்டக் கல்லிதையெடுத்து
உரலினி லிட்டுமே தாக்கி
வரையிருப் புலக்கை மாட்டிவேசாடி
மாவது போலதும் வருதல்
வகைவடிக்கெடுத்து வளமெனும் பாண்ட
மதனிலிட் டமுரியென் றதுபார்
திரையிலாச் சுத்த சலமதை யூட்டித்
திருத்தமாய்க் கரைத்துடன் மூன்று
தினத்தியல் செலுத்திச் செயலதாய்த்தெளிந்து
தீர்க்கமாய்ச் செமிருந் ததையும்
புரையிலாப் பீங்கா னதனி லுட் டாக்கிப்
பொருந்தவைத் திடுரவி முகத்திற்
பொருமிநீர் சுண்டும் பதமறிந் தெடுத்துப்
புகலவும் அமுரி விட்டிடுமே (41)

அமுரியென் றியா ரதுசுத்த கங்கை
ஆண்டுபத் ததுஜல நீர்தான்
அருணசா ரனையா லதுவுண்டு மாற
ஆணுடன் பெண்ணுமே கூடி
வமுதமாய் வருதல் பரவிந்து நாதம்
மகிமையின் நீர்தனை விட்டு
வளமதா யூட்டி வகையுடன் கரைத்து
மாறவே மூன்றுநாள் தெளிந்தால்
கமூர் வருகாமல் முன்செய்த பதமாய்க்
கனரவி முகந்தனிற் றசநாள்
கருதிடு முறையாற் கரைத்துடன் தெளியக்
கல்லுப்பின் கசடெல்லாம் நீங்கிச்
சமுசய மறிய வுவரது போகுஞ்
சர்க்கரை யதுநிற மாகுந்
தவறிடா தெடுத்துச் சம்பழச் சாற்றிற்
றகைமையாய்க் கரைத்தெரித் திடுமே. (42)

எரிக்கவும் நீர்சுண் டினிவருங் குமுத
　　யிதுபதம் வருதலிற் களிம்பத்
தியல்பதாய்ச் சிவந்த வெண்ணெயு மாறி
　　யிருப்பதாற் கல்லுப்பென் றிதுபேர்
கரிக்கிநீர் கசடு களிம்பது மருந்து
　　கைப்பது பரிசுத்த மெனுமாய்க்
கல்லுப்பின் பெருமை காட்டினார் பெரியோர்
　　கண்டுங்கா ணுமலு மறைத்தார்
வரிப்பதுங் கசிவு மாறிடுங் களிம்பு
　　மகிமையென் றெண்ணெயும் நிலவாய்
மதிநிறம் வெளுமை பளிங்கதி னொளிவாய்
　　வகுக்கவச் சிரமதின் வலுவாய்த்
துரியண்டச் சிப்பி யெனும முரியிலே
　　துய்யவெண் கல்லுப்புண் டாச்சு
சுத்தமாம் பூநீர் வழலையுப் பெனவுந்
　　தொடுத்துவர்ப் பூவெனப் பேரே (43)

உவருப்பென் றிதுபேர் உபிர்ப்புவென் றறியும்
　　உசிதமாஞ் சுத்தவிந் தெனும்பேர்
ஒளிவெளி யாதி யுப்புவென் றிதுபேர்
　　ஓங்காரோ சிவமெனும் நாமம்
கவாதிற் கோடி சிவசத்தி பெருமை
　　கண்டிடும் அகாரமே உகாரம்
காட்டொணு திரண்டும் அகாரமே விந்து
　　கருத்தறி உகாரமே நாதம்
துவல்விந்து நாதங் காரமுஞ் சாரஞ்
　　சொன்னசொல் லறியிதன் விபாஞ்
சுருதியாம் ப்ருதிவி அப்புவென் றிதுபேர்
　　சோதியப் புப்பது சேர்ந்து
தவறிடா மலுமே அப்புவுப பதுவுஞ்
　　சார்ந்திட விரண்டு மொன் முகிச்
சகலசித் துக்குஞ் சற்குரு வாகிச்
　　சார்மூங் காரமூஞ் சேர்ந்தே (44)

கார்சார சார கற்பசா தனையார்
கருவுரு விரண்டுமொன் றாகிக்
கலந்திடும் பருவங் கண்டுபத் தாண்டிந்
கருத்துட னெடுத்திடு பாண்டம்
நீர்சுத்த அமுரி சலம்படி நாலு
நிகரில்லாப் புளியது படிதான்
நீயிரண் டையுமே கரைத்துவை தெளிய
நிகழ்திரி தினங்கழித் திறுத்து
வார்த்தெடுத் திடப்பீங் கானதி லூட்டி
வசனியும் ரவிமுகந் தாக்கி
வற்றவைத் திடுநீர் சுவறிடு மமுரி
வார்த்துப்பின் கரைத்துமுன் தெளிவாய்
பேருற வாக ரவிமுகங் காயப்
பிரித்துமே தசவிசை மாறப்
பின்புசந் திரன்போற் சுத்தவெண் மையதாய்ப்
பிறங்குப்புஞ் சத்தியின் பேரே. (45)

பேருமைப் பொருளிற் பிறங்குமென் றறியும்
பேதமே பிரித்துயான் விளங்கப்
பெறியதோ ரதீதப் பரப்பிர்ம வஸ்து
பேசரி தெனினுமே பிசகா
பாருள பசுமை பசுந்துமண் தண்ணீர்
பச்சையென் றிதற்குப்பேர் சொலவும்
பராசத்தி யுப்பு வென்றிதன் பேரு
பரியேம சத்தியென் றிதுபேர்
நீருள்ள நாதம் நாதாந்த மெனும்பேர்
நிகழ்த்திடுங் காரமென் றிதுபேர்
நேர்மையுள் ளதீதம் பூரமென் றிதுபேர்
நேர்மையாஞ் சத்தியுஞ் சிவமுஞ்
சாருமே யிரண்டு மொன்றதாய்ச் சேர்த்துச்
சம்பழச் சாற்றினு லரைத்துச்
சாடிமை யதுபோல்மெழுகது பதமாய்ச்
சருகிடா வழித்தெடுத் திடுமே. (46)

இடும்ரவி முகத்தி லிதனை வைத் தியல்பாய்
இரவியிற் காய்ந்தபின் பதமாய்
எடுத்துப்பா ரிரண்டும் ஒன்றதாய்க் கூடி
யிருக்குமித் துப்பினை யறியக்
கடும்ரவி முகத்திற் சவர்துப்பு அபபுங்
காரமுஞ் சாரமுங் கூட்டிக
சதிரவ ஞெளியிற் கூட்டிடும் வலுத்துக்
கல்லுப்போற் சத்தியுப் பிருக்குந்
தடுத்ததின் பேரைக் கேள்தின் நாமஞ்
சாற்றிட ஆதியுப் பதுவாந்
தற்பரா பரத்தின் பரப்பிர்ம வுப்பு
சற்குரு வுப்புவென் றிதுபோர்
விடுத்திடா பரத்துக் குயிரென அறிவாய்
மேல்முடி மேறுவா சரசம்
விளங்கிய சத்தம் நாதமென் றுச்சு
விபாமும் ஆதியென் றறியே. (47)

ஆதியாம் விந்து அண்டக்கல் லுப்பு
அத்துடன் நாதவுப் பதுசேர்த்
ததுசரி சமனுக் கல்வமேற் றுக்கி
யந்தச்சம் பழத்தின்சா ரூட்டி
ஒதியீ ராறு சாமம்விட் டாட்டி
யோர்மையாம் மையது பதமாய்
உப்பது வருதல் மெழுகது போலும்
உகமையாய் வழித்தெடுத்த தனை
நீதியாய்ப் பில்லை பிடித்துடன் ரவியில்
நிலைத்திடுங் கடுரவி முகத்தில்
நெறியதா யுலர வலுத்தகல் லதுவாம்
நேர்மையாய்க் கணிரெனி லெடுத்து
வேதியா மிதனைக் கொட்டிடுஞ் சத்தம்
வெண்கலநா தவோ சையதாம்
வெளியெடுத் தோட்டில் வைத்துமே லோடு
மிகச்சந்து மூடிமண் செய்தே. (48)

சந்துமண் சிலை சாத்தி யோகியிற்
றனைதை யெடுத்துமே சார்வாய்ச்
சற்குருசிவத்தின் றவத்தினூற் பூசை
தவரிடா நிஷ்டையோ கமுமாம்
சுந்தர கண்ட தாரையில்வாசி
சுகமொரு கடிகைதா னூதிச்
சுழிமுனை திறக்கத தொழுதுடன் றுதித்து
சுடரொளி மேவியே போற்றிக்
கெந்திர மவுன கேசர மெழும்பிக்
கெசரி யெனுமடி பணிந்து
கிலேசம்வா ராமற் கதிபெற வெளியிற்
கிருபைவைத் தொருமன தாகி
அந்தர சத்தம் விசும்புகொண் டருவி
யர்ச்சித்து மடிபணிந் தமிர்தம்
அங்க ராதனைசெய் தொருமுழப் புடத்தி
லறிவறிந் தக்கினி மூட்டே. (49)

மூட்டுமுப் பூவை முனியருள் போற்றி
முக்கிய மாகவும் புடத்தில்
முனிந்திடாத் தணலிட் டாறிடும் பதத்தில்
முப்புவை யெடுத்துடன் பார்க்கக்
காட்டுங்கை பாகங் காத்தொரு மனதாய்க்
காருமே காத்தெடுத் ததுபின்
கமலமா மலர்முப் பதுமங்ல வதுபோற்
காந்தியென் றறிவது மெளிதோ
பூட்டுமெ திறக்கும் புட்பம்போல் நீறும்
பொருமியே சுண்ணமதாகும்
புகழது சுருக்காம் அதீதமாங் காரம்
போட்டிடு காத்தினி லனுவு
ஊட்டிடுந் துளிநீ ருடன்விடும் போது
உயிர்பதைத் திடுமொரு நிமிஷம்
உடலெலாம் வேகுஞ் சங்கதின் கனிம்பா
லுடனேகொய் பளித்திடும் பாரே. (50)

பருங்கிரந் தியுமாய்ப் பழுத்துமே யுடையும்
பதறிடா முப்புவின் சுண்ணம்
பகர்பதி னெண்பேர் பரகதி யடையும்
பராபரன் தரிசனமாகும்
அருந்தவத்த தினால் ஆதியுப்பதிகம்
அநுக்கிரக சுண்ணமென் றிதுபேர்
அண்டக்கல் வழலை யருள்பெருஞ் சுண்ணம்
ஐவகைச் சுண்ணமென் றிதுபேர்
கருவியி னுதித்த மதிரவிச் சுண்ணங்
கமலமென் றதுசிப்பிச் சுண்ணம்
கருணையா னந்தக் கற்சுண்ண மிதுபேர்
கற்பூரச் சுண்ணமு மிதுபேர்
திருவினு லமைத்த கருவிதன் பெருமை
சிரோமய முப்புவின் சுண்ணஞ்
செகதலம் புகழும் சுண்ணத்தின் பெருமை
ஜெயம்பெறு சுண்ணமி தாமே. (51)

செய்தொழில் வண்ணான் சீர்பெற்ற மாக்கஞ்
செப்புமுப் பூச்சுண்ண மிதுபேர்
சித்தர்கள் மறைக்கும் நாலுக்குங் குருவாய்த்
தெளிந்திடுஞ் சுண்ணமாமிதுபேர்
கைவசப் படுத்துங் கனகமென் றிதன்பேர்
கமலபொற் பதமலர்ச் சுண்ணங்
கற்பசா தனைசெய் விதத்தினால் முப்பு
கடாட்சம்பெற் றவர்செய்து முடிப்பார்
மைவிழி மாதுமாயை யிலடைந்தொர்
மனிதர்கள் முடிப்பது மரிது
மாமுனி யெனக்கு வழுத்திய படியே
மதிரவி கற்பநூல் வசனந்
துய்யவெண் ணமுரி சுத்தநீர்க் கங்கை
தொடுத்தவர்க் கொருதுன்ப மணுகா
துரோதகை யாசை வைத்தவர்க் கெய்தாச்
சுத்தவை ராக்கிய வானே. (52)

ஆயிக்கிய மின்றூல் ஞானப்பிர சங்கம்
 அருந்தவ ரனைவரும் புகழும்
ஆயிரத் துடனே றூறுமுந் றூறும்
 அமைப்புடன் கற்பமுந் றூறும்
வயிக்கமா யாய்ந்து மாபதம் பெறலாம்
 வழுத்துறூற் கிடைப்பது மிதாம்
மாநிலந் தனிலே கற்பங்கொண் டமுரி
 வருஷமோர் பத்துமே உண்டாற்
செயிக்கலாம் முப்பூச் செய்கைகண் டறிந்து
 சித்திமுத் திகளறிந் திடலாஞ்
சீர்பெரு மமுரி தெளியவே சுத்த
 செலமது தயிலம தாகிற்
சுயிக்கலா மமுதஞ் சுரோணித மிதுபேர்
 சொன்னமூ வாண்டினில் வேதை
சுகாதித வாத மெதிரில்லந் துலவுஞ்
 சூட்சமு மின்னதென் றறியே. (53)

சூதைவே தைகளுக் கமுரியே சூட்சஞ்
 சுருதியின் கற்பமுந் றூறுந்
தொடுகுறி பரீச்சைத் திறவுகோ லிதுதான்
 சுகம்பெற வேதையுண் டாகும்
வாதறூ லதீதம் பதினெண்பேர் சித்தர்
 வசனித்த றூல்களும் பலிதம்
வாசிகொண் டமுத கற்பசா தனையால்
 மகாசித்து மாகிட லாகும்
பூதமைந் தமுரி புனலது மதனாற்
 புகழ்சுழி முனையது திறக்கும்
பொறிசுட ரதனில் நடனமுங் காணும்
 பூரணத் தேகவச் சிரமாங்
காதலென் றறியக் கசடது மறுத்துக்
 கசிவது மகற்றிறூ லறிந்து
கனகமா முப்பூச் சுண்ணமா மடக்கங்
 கற்றதோர் குப்பியிற் கருவே. (54)

கருவது மறிந்து சதாசிவ மூலங்
கருதிமெய் வாசி கொண்டோது
கமலமாயிரத் தெட்டிதழினுண் மூலக்
கருணையா னந்தவா சியினால்
அரிபன் முதலோ ரறிந்திடாச் சூட்சம்
அம்மூல மாஞ்சுழி மூலம்
அண்டமா மதனுள் ளமர்ந்துநின் றிலங்கும்
ஆதியாய் அந்தமாய்த் தோன்றும்
மருமலர்க் கனக வழலைபூ ரணத்தை
மறைத்ததி னல்மதி விளங்கார்
வளரடி மூல மதின்மேலா தாரம்
வருககவா தாரபோக் கதனைப்
பொருந்தவும் போக்கார் போக்கறிந் தருளால்
பொருள்கண்டு போக்கதை வகுக்கார்
புதுமைகா ணார்கள் வாக்கறி யார்கள்
புகழ்மன தறிந்திடா தெனவே. (55)

கருவின்பரிபாஷை.

மனந்தெளிந் தருளின்பொருள் தனைக் கண்டு
வருவதும் போவது மறிந்து
வளமைதா னறிந்து மாதவம் புரிந்து
மதியமு தத்தினல் மோட்சந்
தனதுநெஞ் சகமே தானது வறிந்து
தன்னெறி தனக்குளே தவஞ்செய்
சதுர்மறை யோர்கள் ஐந்துரு வளப்பஞ்
சாதனை சித்திபெற் றனர்கள்
கனகமா ணிக்க மெனும் பொருளறிந்து
காட்டினே னைந்துரு மூலங்
கசிந்திடும் நாவில் ருசியது மறிந்தாற்
காணுமைந் துருசுத்தி கருது
முனதுமுப் பொருளின் விபரமொன் றறிய
முத்தியா மடிநடுமுடியும்
முனனடி மூலம் உகாரமீ தாச்சு
மூலமாஞ் சத்தியென் றிதன்பேர். (56)

சத்தியா வதுவே நாதமென் றிதுபேர்
தனைவிளங் கிடினுமே நாதம்
சாற்றிடி லிதன்பேர் மகாரமென் றிலங்குஞ்
சருகென்ற மமுதமென் றிதுபேர்
புத்தியில் விளங்கும் வாசிதாரனென்றும்
பூரணப்பச்சை யென்றிதன் பேர்
பூத்திடு முவர்ப்பு அடிமூல மென்றும்
புகல்வதும் நடுமூல மறிய
மத்தியு மிதுவே அகாரமே நடுத்தான்
வசனியும் அகாரமே சிவமாம்
மதுசிவ மரிய சிவமெனும் விந்து
மதியிது கங்கையென் றிதுபேர்
சித்தியும் விளங்குஞ் சைலமென் றிதன்பேர்
ஜெயசல சாரமென் றிதுபேர்
தெளிந்திடு மூசி நீரெனு முப்பூச்
செய்குரு வப்புவின் பேரே. (57)

போணி விளங்குஞ் சந்திரபுஷ்கரணி
பிரபல்ய கங்கையென் றிதுபேர்
பேதமென் றறியச் சமுத்திர ஜலமாய்
பிரிந்திட அறுவகை யிதன்பேர்
தாரணி மனிதரறியவு மிதனைச்
சடாதர வமுதமென் றிசைப்பார்
சங்கைக ளறிய விந்துவென் றிதன்பேர்
சரக்கதில் வீரமென் றிதன்பேர்
சீரணி வீரஞ் சித்தர்வைப் பமுரி
செலுத்தினர் தீட்சைபத் தாண்டில்
செயவீர நாம முடலினுண் டான
செய்தியைப் புலத்திய னுரைத்தேன்
வீரணி நடுத்தான் விளங்கினேம் அகாரம்
மேருவே மேல்மூல முடிதான்
மேன்மையா மமுதம் மவுனமா மாதி
விசிதமிப் பெயர்களின் விதியே. (58)

வீதியி லுதித்த மெய்ப்பொரு ளாதி
விசித்மாம் பரமெனு மிதுபேர்
மேருவி லுதித்த சத்தமென் றிலங்கும்
வெடியுப்புக் காரமென் றிதன்பேர்
சோதியாங் கமலச் சிப்பியென் றிதுபேர்
சுருதியாங் காரமென் றிதுபேர்
சுத்தமாம் பிறவி யானைக்கல் லென்று
சொற்றகும் பிடுகல்லென் றிதுபேர்
நீதியாய் விளங்கும் ரவியெனும் பரமாய்
நிலைத்திடுங் கல்லுப்பு எனும்பேர்
நீச்சுவெண் கல்லு கும்பமென் றிதுபேர்
நெஞ்சரி மவுனக்கல்லிது பேர்
மேதினி தனிலே விளங்கிய வழலை
மிகுத்தமோ ரூமைமென் றருளோ
விசிதமா யறிந்து வழலை யுப்பிதுபேர்
வெள்ளைக்கல லெனுமிதன் பேரே. (59)

ஆண்டின் விபரம்

கல்லுக்குள் வழலை கருத்தினை யாய்ந்து
கற்பநூல் விளங்கிய சூஸ்த்திரம்
கமலமா யிரத்தெண் மலரினி லமுதங்
கற்பசா தனையுண்டு தேறி
சொல்லெனுஞ் சுருதி சோதியாய் விளங்குஞ்
சொன்னதோர் மூப்புவை மறைத்தார்
தொடுதிநூல் கோடா கோடிசூஸ்திரமாய்த்
தொடுத்தனர் சரம்பொழிந் ததுபோல்
இல்லத்தி லிருந்து யிதுகரு முடிக்க
எவர்களி னுமே முடியா
எடுத்தறிந் தோதி வெளிப்பட்ட நூல்கள்
இகழ்ச்சியிப் பொருளை விள்ளாமல்
தொல்லையாய் மறைத்துச் சூட்டினர் பெரியோர்
தொடுத்தின்னூற்கோடியி லொன்று
சூஸ்திர மறியார் கோர்வைநூல் பார்த்தும்
சுணங்கனைப் போலலைந்தனரே. (60)

அனைவரு மறியார் அறிந்துமே விழலா
யாடினார் வாதஞ்சுட் டலைந்து
அண்டக் கல் லுப்பு வழலையின் பெருமை
அறியாமல மாண்டனர் சிலபேர்
கனம்பெருங் கருவெ காமப்பா லறியார்
கானற்பா லின்னதென் றறியார்
கருவிது ரெண்டுங் காரமுஞ் சாரங்
கண்டுங்கா ணுமலு மடிந்தார்
முனதுகும் பியினில் மூலமே புளிதான்
முக்கிய மெனும்பொரு ளமுரி
மூலவா சியினு லிதுரெண்டு முத்தி
முன்னமே அமுரியோ ராண்டு
இனமறி யாமல் இகழ்ச்சிகள் செய்தார்
யீராண்டிற் புளியறிந் துண்ணுர்
இகபர கதிக்கு இதுகற்ப சூஸ்திரம்
எய்தினோர் கதிபெறு வாரே. (61)

கெதிபெறுங் கருவை வெளியிடா தடக்கிக
கீர்த்திவா னொருவனுண் டுறுதி
கேள்விமாந் தருக்குக் கருவிதென் றுணரார்
கேசரி யின்னதென் றுணரார்
அதிவித கருக்கள் ஐயுரு விளங்கார்
ஐவகைச் செயநீரென் றருளார்
ஆண்மைபெற் றவரோ டதிசயம்பேசார்
அகத்தினி லிருப்பதை வகுக்கார்
மதியெனும் விளங்கார் மருமலர் வாசம்
மகிழ்ந்துபூ மலரையும் வழங்கார்
மனதுகூர்ந் தறிவிற் கருத்துகந் தமுத
வாசியை யின்னதென் றுரைக்கார்
பதியமூ தண்டப் பரமெனு மவுனம்
பரிசுத்த அண்டமென் றமுதம்
பாடுபட் டுழைத்துப் பத்துடன் தீட்சை
பரிட்சைகண் டமுதமே பணியே. (62)

வெடியுப்புச்சுண்ணம்.

பணிந்துசற் குருவின் பதமலர் போற்றிப்
பாடினேன் கற்பநூல் பலிதம்
பார்த்துசித் துலகிற் பாரில்நின் றுடப்
பகருவேன் வெடியுப்பு ச்சுண்ணம்
மணிந்துல கத்தில் மணிதர்செய் யுப்பு
வழக்கமாய்த் தொண்டுசெய் திடினும்
வரிசையாய் விளங்கும் பாகங்கை கண்டு
வாங்கிடிற் காச்சலேந் ததனிற்
துணிந்துல கெனுமே கம்பியுப் பிதுதான்
துய்யபீங் கானதி லூட்டிச்
சுகநடு வான பச்சைநீ ரமுரி
தொடுத்துவிட் டதைக்கிண்டி ரவியில்
அணிந்துஅம் முகத்தி லமுரிசுண் டிடும்பின்
அப்படி நீர்விடும் பத்து
அதுமுறைப் படியே அருணணிற் காய்ந்து
அடிக்கடி நீரைவிட் டுலர்த்தே. (63)

உலர்த்திட ரவியி லுண்டிடு மமுரி
யுப்பது முலர்ந்துகாய்ந் ததன் பின்
ஒருமீ ரைந்து முறைப்படி தீட்சை
யுறுத்தமா யுலர்ந்தபின் பார்க்கச்
சலமதின் கசிவுங் கசடதி னூறல்
தானது விலகிடும் ரவியால்ச்
சங்குபோ லிருகிப் பச்சைநீ ரதனுற்
தடங்களில் லாமலும் வலுத்து
நிலவுபோ லொளிவாய் நிகரிலா மலுமாய்
நிறமெனும் வெள்ளைக்கல் லதுவாய்
நேர்மைகட் டினமாய்ப் பொறிபுகை விலகி
நிசமது கம்பியுப் பதுவாய்
பலபல நூலிவ் விதமெடுத்து துரையாப்
பளிங்கது போலவுங் கட்டி
படபடத் திலைபார் அடியிது மூலம்
பகர்ந்திடுந் தந்தம்போ லாமே. (64)

தந்தம்போ லிருகி வலுத்தகட் டதுவாய்த்
தவளமிந் துப்புவென் றிதுபேர்
தனித்தவிந் துப்பு வெடியுப்ப தாச்சு
தகர்ந்தநீச சிதுவெகு நீச்சு
விந்தையாய்க் கட்டும் வெடியுப்புச் சுண்ணம்
விளக்கமாய் விரித்துயா னருள
வெடியுப்புப் பலம்பத் திபக்கமில் லாமல்
விந்துவென் றமுரியுப் பதுவும்
அந்ததோர் மூலப் புளிசரக் கதனுல
அதுரெட்டி கூட்டியே வருத்த
அமுரிவிந் ததுநீ ராட்டிடு மதனை
ஆறுசா மங்களில் மெழுகாம்
வெந்துவே கமதாய் விம்முதேள்க் கொடுக்கால்
மிகவுமே கொட்டிடுங் கொடுக்காம்
மேலுமே வேகும் சம்பழச் சாரை
விட்டிடை விடாதரைத் திடுமே (65)

புடத்திட்ட விபா முறை

அரைத்திடக் குழறும் அதுபதம் வருதல்
அஞ்சுசா மத்துமச் சார்விட்
டானதவ் வீதம் ஆட்டிடு மெழுகாகும்
அதைவழித் துவட்ட தாச் செய்யப்
புதைவரு காமற் பலரவி முகத்திற்
புகழதாய்ப் பசுமைகாய்ந் ததுபின்
புனிதமா யெடுத்துக் கொட்டிப்பார் சத்தம்
புதுமையில் விதமென்ன வெளிதே
உரைக்கவுன் னிதமாய்க் கனீரெனுஞ் சத்தம்
உற்பவ முதித்தகதா லோட்டில்
உடனதி லூட்டி யோடுமேல் மூடி
உவமைமண் சீலையே முணர்ந்து
தரையெனும் புவியி லிருமுழக் குழியிற்
றனியதாய்க் காட்டெரு மிகவுந்
தரும்படி மேவித் தணல்கொடு புடம்போட்
டதுபுட மருகிருப்பதுவே. (66)

சிலுமண்செய்ய விபாம்.

அருகிருந் தனதா மாறிடும் பருவம்
ஆறியே புடம்பிரித் ததன்பின்
அடக்கமா யிருந்து வெடியுப்புச் சுண்ணம்
அதுவென்ன மலர்ந்திநின் றினமாய்
மருமமா மலர்கொண் டதீதமாங் கல்வ
மதிலிடு மதுமல ரூட்டி
மகிழ்மூலப் புளியுண் டதில் வருமமுரி
வசனியந் நீர்வருங் காலம்
கருவுநீர் நாதங் காரநீர் தாக்கிக்
கலக்கமைப் போலவும் பதமாய்க்
கடூரமாஞ் சுண்ணம் வழித்துவட் டதுவாய்க்
கதிரவன் முகத்தினிற் காயக்
குருவனுக் கிரக கடாக்ஷம்வைத் தருளாற்
கொடூரவி தன்னிற்காய்ந் தெடுத்துக்
குடகுவோ டதனி லூட்டிமே லோடு
குறிப்புடன் மூடிச்சந் துணாந்தே. (67)

சந்துமண் சீலை சாத்திடும் பதமுஞ்
சமமதாய்ப் புடமதிற் பரந்திச்
சமர்ப்பித்து வன்னித் தணலுமே மூட்டித்
தனைக்கரு காமலும் விளங்கா
முந்தவும் புடம்போட் டெடுத்துப்பா வனையாய்
முதரிடா மருமல ரதனை
முகதரி சனமா யுதயசந் திரன்போல்
முப்புர மெரித்தநீ றதுவாய்ச்
சந்திர நிறமாய்த் தவளம்போல் மலர்ந்து
சாரைவித் ததுசல நீராய்ச்
சங்கையில் லாம லதீதமாங் காரந்
தரணிமா னிடர்களு மறியார்
சுந்தரக் குப்பி யதனிலுண் டாக்கிச்
சுகாதீதச் சுழிமுனை யருளிற்
சயகுரு பாதத்தி னடிதொழு திந்தச்
சுண்ணமே பதனஞ்செய் வீரே. (68)

செய்தொழிற் பாகந் திருத்தவு மரிது
  தீட்சைபத் தாண்டுமே தெளிந்தாற்
செப்புவெண் மலரு மனதறிந் தறிவார்
  செலுத்தியம் மனதையுங் காத்தோர்
வையக முழுதும் புகழவே யாழ்வார்
  வான்புவி யேவல்செய் திடுமுன்
மனந்தெளி யாதோர்க் கிம்முறை யணுகா
  மதிரவி கற்பத்தா லெய்துங்
கைவசப் படுமே காரமுஞ் சாரங்
  கற்பத்தாற் கைவல்ய ப்படுதல்
கருணையா னந்த மமுரியே காரங்
  கடாட்சத்தி னற்கலி நீங்கும்
ஐயமென் றென்னு தமுரியை யடுத்து
  அசடிலா மனுஞ்சிவ தீட்சை
ஆண்டொரு வருடந் தவறிடா மனுமே
  அகாரமாஞ் சரமாறி யேத்தே. (69)

ஏத்துமோ ராண்டு இதுகழிந் ததுபின்
  ளளளள வாகிலும் பிசகா
இதுவேகாட் சரபஞ் சாட்சர மென்பார்
  இவ்வுயி ரெழுத்தினைத் தினமும்
வேத்துமைப் படுத்தா ததிதசா ரனைசெய்
  மிகவொரு நாழிகை யிதுபோல்
விளங்கினர் அறுபது நாழிகை கடிகை
  விருப்பமென் றறிந்தொரு நாளும்
காத்தினி லிருந்தென கானலி லிருந்தென்
  கனமழை பொழிந்திடி யிடித்தென்
கனவழி நடந்தென் சோம்பலில் லாமற்
  கற்பசா தனைவசப் படுத்தும்
மாத்திதிற் கண்ட பற்பங்கொண் டமுரி
  மவுனமாஞ் சுத்தவை ராக்கிய
மனிதரோ டிணங்கா திருந்தறிந் திடாமல்
  வசப்படுத் தாண்டு சாதித்தே. (70)

கரியுப்புக் கட்டு

வாதியாய்ப் புவியில வாழ்வதற் கரிய
மவுனமாங் கரியுப்புக்கட்டு
வகுத்திடுந் தெளிவாய் வகையதா யுரைக்க
மகத்துக்கள் மறைத்திடுஞ் சூட்சம்
பேதையென் றுலகிற் பெருத்தருள் மூலி
பிரகாசக் குதிரையி னடிதான்
பிரளிலா மூலி குளிமீட்டா னின்னும்
பெருந்தும்பை தாழையு மேனி
நீதியாய் வகைச்சா ரிதுசரி சமனுய்
நிலைதவ றாதிடி லிதற்கு
நிகழ்த்திட நாலுக் கொருவிதங் கரியுப்
பெடுத்துடன் சாரினிற் கரைத்துச்
சேதியாய் பாகந் தெரிந்துட னடுப்பிற்
தீயெரித் ததுஜலஞ் சுண்டச்
செய்கையாய்ப் பொங்கி வருதலில் லாமற்
சிறுகவே தீயெரித் திடுமே. (71)

சிறுகவே யெரிக்கச் சலமெல்லாம் வற்றிச்
செழிப்பதில் லாமலுங் கட்டுஞ்
சீரில்லாமற் கசிகசடத்துத்
திறமதாய் வலுத்துட னிருக்குங்
குருவுட னிதற்கு அரைப்பாக வீதங்
கூட்டிடு வெடியுப்புச் சீனங்
குறைவரா திடினும் அறுவகைச் செயநீர்
குழூற விட்டாட்டியே மைபோல்
அறுவகை யறியும் அமுரிதா னெனுமே
அறிந்தறி யாமலு மறைத்தார்
அதுமெழு கதுபோல் வருதலி லெடுத்து
அதீதவட் டதுசெய்து ரவியில்
மறுப்படா மலுமே கதிரவன் முகத்தில்
வைத்துக் காய்ந்ததையெடுத் தோட்டில்
வகுத்துமே லோடு மூடிமண் சீலை
மறுபடி யொருமுழ்ப் புடமே. (72)

முழப்புட மதனில் மூட்டுவென் னிவைத்தான்
முனிந்திடா மலும்புட மாறி
முதிர்ந்திடா மலர்ந்து கரியுப்புக் சுண்ணம்
மூவுலகெ லாம்விலை மதிக்கப்
பழமையுப் பறியார் பதனமாய் வைத்துப்
பரிசைவே தைகளுமே யாகும்
பலபல தொழிள்கள் நீச்சிலாச் சுண்ணம்
பாரினில் நினைத்தது முடியும்
இழயகல் லுப்பின் கட்டினை விளங்க
வெடுத்துநீ பொடித்துமுன் சாற்றில்
இனமதாய்க் கரைத்து அடுப்பின்மே லேற்றி
யெரித்திட நீரது சுண்டி
பிழைவருகாமற் குமுறவுங் காய்ச்சிப்
பின்பதை யாறவைத்திடுவாய்
பெருமைதா னிதற்கு அரைபபாக வீதம்
பேண்வெடி சினமுஞ் சேர்த்தே. (73)

விதமறு வகைநீர் விட்டுநீ ராட்டி
விடஜெய நீரதுமூட்டி
விதமெழு கதுபோற் பதம்வர வழித்து
விதமதாய் வட்டுசெய் திடும்பின்
அதமறு பத்துச் சரக்கதில் மாளும்
அருணணிற் கர்ய்ந்தபின் பதனை
அடக்கியோ டதனில் அதீதவோ டதன்மேல்
ஆக்கினை செய்துமண் சீலை
பதமுழப் புடத்திற் பதியவுந் தாக்கிப்
பதிந்தபின் னதையுமே எடுத்துப்
பார்த்திடுங் கல்லுப் பதுமலர்ந் ததீதப்
பளிங்குதன் நிறமதாய்ச் சுண்ணஞ்
சுதனருள் தவத்தாற் சுண்ணம்வந் தெய்துஞ்
சுகிர்தபுண் ணியஞ்செய்தோர்க் கெய்துந்
துரோகிக்கு எய்தாப் புத்துப்போர் கெடுநீ
சுண்ணமுங் கருகிப்பா ழாமே. (74)

சுண்ணமென் றதீத வகைகளுக் கமுரி
தொடுத்துச்சா ரணையது மாறச்
சுத்தமென் றமுத கங்கைநீர் பிடித்துச்
சோதித்துப் பார்க்கவே மஞ்சள்
எண்ணவிந் நீருஞ் சிவந்தகுங் குமம்போல்
இதுவெகு புதுமைகண் டிடவும்
எய்திடும் சரக்கு யாவற்றும் பலித
மிதுநில வாற்சுண்ண மிசையும்
விண்ணம்வா ராது வெகுசரக் கதுவும்
வேகமாய்க் குருவதாய் விளங்கும்
விசிதகற் பூரச் சுண்ணமென் றருள்
விதவொரு கட்டியா யெடுத்துப்
பெண்மைவே றில்லை யறுவகை நீறிற்
பெருமையாய்த் தோய்த்துடன் ரவியிற்
பேண்பத்து முறையே அடிக்கடி தோய்த்துப்
பிழைவரா திருமுறை செய்யே. (75)

வாருதி சிவக்க வழலையுஞ் சிவக்கும்
மகிமைகற் பூரமு ங்கட்டும்
மணிவிளக் கேற்றி யிதனையே கொழுத்த
வழக்கம்போய் தீபத்துக் கேற்க்கா
காருநீ பூரங் கட்டியே வலுக்குங்
கட்டிதை யெடுத்துப்பின் பாகங்
கலந்திடு மின்னும் வெடியுப்புச் சீனங்
கட்டுதற் கிதுசரி சமனாய்த்
தீருமே நற்கல் வத்தினுட் டாக்கிச்
சிதறிடா தறுவகை நீரால்
செய்பத மாக ஆட்டிமை போலுந்
தேன்மெழு கதுபத மெடுத்துப்
பாருவட் டதுவாய்ப் பாகமா யுணர்ந்து
பானுவென் றருணனி லுலர்த்திப்
பாண்டவோ டதனில் வைத்துமே லோடு
பரிவுடன் சீலமண் ணேமே. (76)

சிலையண் ணிட்டுப் புடமது கோழி
செழுத்திப்பின் ஞாவு மெடுத்தாற்
திறளிந்தபன் போர் கற்பூரச் சுண்ணஞ்
சித்தர்கள் செய்வது அருமை
வாலையம் பிணைப்பெண் மாதுடன் சிவமும்
மருவினு லிதுசித்தி யாகும்
மறைத்திடும் பூட்டுக் கிதுகற்ப சூஸ்த்ரம்
மவுனமாந் திறவுகோ லமுரி
வேல்விழி மாத ராசையின் வலையால்
மிகவுமன் னோர்களின் மயலால்
விந்தழிந் தனந்தம் வேள்வியில் மாண்டு
வியாசரால் உலகம்பா ழாச்சு
சாலவுங்கற்ப சாஸ்திரமுந் நூற்ற
சாட்சியிந் நூலெடுத் துரைக்குஞ்
சகலமுந் தோற்றம் இதற்கெனும் பிறவி
தானுதித் திடுபரி தரித்தே (77)

அகாரமென் றெழுத்தில் அமுரியுந் தோன்றி
யதனிலிந் துப்புவுந் தோன்றி
அப்புவு மதிற்டஞ் சட்சரந்தோன்றி
யஞ்சுரு வறுவகை தோன்றி
மகாரமென் றதீத மாலுமே தோன்றி
மதிநில வுப்பதுங் கங்கை
வகையதை யுரைக்க அறுசுவை யுண்ண
மகிமையைச் சொல்லவு மெளிதோ
நகாரமென் றதனில் மகாரமுங் கூடி
நாதநீர் சறமது தோன்றி
நானிலந் தனிலே நாதவிந் திழைந்து
நடக்கையால் மலசலந் தோன்றி
உகாரமென் றெழுத்தில் உடல்புளி தோன்றி
யுப்புஅப் பதுவினிற் சேர்ந்து
உருவதுவாகி தீட்சையா றுண்டில்
உதகமென் றறுவகை நீரே. (78)

அறுவகைச் செயநீ ரதனையே யுரைக்க
அருளும் பொட் டுப்புடன் சீனம்
அங்கடி யதனில் வெங்கார சாரம்
அதிதமென் றிடும்பூரத் துடனே
மறுமமாய் மறைத்த மலப்புளி தருசு
வருஞமா றுண்டினி லமுரி
மதுவைவிட் டாட்டி மயனமாய் வருதல்
வழித்துடன் மெழுகதின் பதத்தில்
வெறுத்திடா திதனை வெண்டிப் பீங்கானில்
மெழுகதி லூட்டியே பனியில்
வெகுஜலம் பொழியக் கசிபநல் வாரம்
மிகவொரு குப்பியிற் றுக்கி
இறுகிடுஞ் சாக்கில் அறுபத்து நாளும்
இந்நீரிற் றோய்த்துடன் ரவியில்
மிகச்சுருக் கிடவுந் தோய்த்துடன் வாரம்
மென்மேலுங் கடுரவி சுருக்கே, (79)

சுருக்கிடு மதுவை ஓட்டினிற் றுக்கிச்
சுருக்கிடச் சிறுகத்தி கமலஞ்
சுருக்கது மேறி வனுத்துக் கட்டிடுமே
சூட்டிடுஞ் சாக்கெலாங் கட்டுஞ்
சிறுத்திடுந் தீயிற் கடுகுப்பிர மாணஞ்
செலுத்திட வூசிபோல் புகைந்தால்
ஜெயமிது பற்பஞ் சுண்ணத்துக் கடுக்குஞ்
செந்தூரஞ் சாக்கினி லாகுங்
குருத்துட னூசிப் புகையடங் கியதாற்
குறையிலா மாத்திரைக் குளிகை
குவலய மாக்த ரவரவர் பிணிக்குங்
கொடுத்திட நோய்களுந் தீருஞ்
சுரமெழு ஜன்னி தோஷமு மகலுந்
தொடக்கமாத் திரைக்கெதி ரொருவர்
சுத்தபண் டிதனென் றனைவரும் வருகார்
சுண்ணமென் றமுரியின் சுருக்கே. (80)

அமுரிசா தனைசெய் தவனியி லுளவா
தவர்க்குநோ யாண்டினி லணுகும்
அதற்கதற் கஷிழ்த் மீரஞ்சு திங்கள்
அருளினேம் முன்றா மென் றறியும்
வமுரியிற் கொள்ள அதன்பிர யோகம்
வச்சிரச் சிப்பித்தோ டண்டம்
வழக்கமோ ராண்டு மாற்றியே மாறில்
வழக்கம்போய் மறுயிரு ஆண்டிற்
குமுரிகல் லானை யண்டக்கல்ப் பற்பங்
குறித்துடன் புளியுணர் வோர்கள்
கொல்லவந் தெமனும் வூழ்வினை பயந்து
குப்பிடு மமுரியின் வேகம்
சமுசய மறியார் எழுக்தறி விளக்கச்
சைகையெல் லாமினி யுரைக்கச்
சனகாதி ரிஷிகள் பதினெண்பேர் திரட்டுந்
தமிழினாற் றிருத்தவு மறியேன். (81)

பஞ்சபூதத்சாக்குகள்

திருத்தவைர் துருவும் பிருதிவு மப்புந்
தேய்வுடன் வாய்வுமா காசந்
திரையகற் றிடவு மண்தண்ணீர் நெருப்பு
சீர்பெருங் காற்றுமே சத்தம்
பொருத்துமிவ் விதமாம் பொன்வெள்ளிசெம்பு
புகலிரும் பதுவுங்கா ரீயம்
பொருந்துகவ் வெழுக்தா மவ்வுசிவ் வெழுத்தும்
புகலும்வவ் வெழுத்துயவ் வெழுத்தாம்
கருத்துகவ் வெழுத்தில் மவ்வெழுத் தணுகுங்
காணுமவ் வெழுத்திற்சிவ் வெழுத்துங்
கலந்துபுக் கிடுமால் சிவ்வெழுத் ததனிற்
காத்துவவ் வெழுதுவந் தணுகும்
அருத்துவவ் வெழுத்தில் யவ்வெழுத் தணுகும்
யவ்வெழுத் ததுசுட ரதனில்
அடர்ந்துபுக் கிடுமால் சுடரது மணியில்
அணுசரித் திடுமது மணியே. (82)

அண்ட வுற்பத்தி

அதுமணி யோடிப் பாத்தினி லணுகும்
அதுபரஞ் சிவத்தினி லணுகும்
அருஞ்சிவ மோடி யண்டத தில ணுகும்
அண்டமுந் திரும்பியே பறந்து
இதுவென்ன அண்டந் தம்பமதாகி
யினமறிந் ததுவொரு தூணய்
இசைந்திடுங் குருவாய்த் தசமெனுந் தீட்சை
யிறப்பதும் போய்மறு பிறப்பாய்
விதமெனும் ஸ்தம்ப மதுவிளங் கிடுமாய்
மேலில்லை கீழில்லை விரும்ப
மிகவுமே யானும் இதுவொரு ளறியேன்
மேதினி தனிலொரு வனும்யாண்
மதுரசெந் தமிழை யாய்ந்துடன் விளங்க
வாயில்லை காவில்லை யுணர
மண்ணுள வறியேன் விண்ணுள வறியேன்
மனதறிந் துணரநா வில்லையே: (83)

எனும்பர மதனில் மணியுதித் திடுமாம்
இதுமணி தனிற்பர முதிக்கும்
இனிச்சுடர் வீசி சுடரினில் யகாரம்
யகாரத்தில் வகாரம்வந் துதிக்கும்
மனுமல ராவி வகாரமென் றதனில்
வருகுமே சிகாரம்வந் துதிக்கும்
மருவுமே சிகாரம் அதுதனில் மகார
மதுமுதித் திடுமெனு மாகில்
பனுமலர் பொழியும் மகாரமென் றதனிற்
பகருவோம் நகாரமே யுதிக்கும்
பரமெனும் பூமி யிருந்தரு வாச்சு
பசைந்தமண் நீருமுண் டாச்சு
பனுக்களிவ் வளவும் மறுபிறப் பறியார்
மாதுபெண் ணுருவினு லுதிக்கும்
வான்புவி யனைத்தும் வந்தவா றதுபோல்
பகிலமென் றதுபடைத் ததுவே. (84)

படைத்திட வொழுங்கு மகத்துக்க ளானோர்
பாரினில் ஜீவஜெந் துதித்துப்
பராபரை யெனும்பே ரிவ்வள வனந்தம்
பரையினு லான்திவ் வாறு
விடைத்ததிவ் வாறு சூட்சமே யல்லால்
வேறொன்று மில்லைபார் புவியில்
விந்துநா தாந்த சின்மய சொரூபம்
விடுத்துல காதித புவனம்
நடைத்ததா னுலகம் மதனப்பா லமுதம்
நாடிக்கா லடியிற்காத் திடவும்
நரகமுஞ் சொர்க்க மிறந்துடன் பிறக்க
நாடினு ளிவளுமிவ் வளவு
உடலுயி ராக வுனதுளே யிருந்து
உயிர்க்குயி ராகியே மாது
உற்பவச் செயலா லம்பிகைப் பெண்ணை
யோகிக ளறிந்துமே துதிப்பார். (85)

வாசியோகம்

துதித்திடும் ராஜ யோகத்தின் சுருதி
சுருக்கமாய்த் தெளிவுட னுரைக்கச்
சூக்ஷ்கா ரணத்தைச் சொல்லவு மெளிதோ
சூட்டினுர் மகத்துக்கள் மறைவாய்
விதித்திடும் வாசி விளங்குமூ லத்தில்
வெளிவரு காமனு மிருப்ப
மெய்கண்ட தாரை சாதனை மிகவும்
வேறொரு சிந்தையும் நினைக்கா
உதித்துவங் கென்று உள்ளத்தில் வாசி
யொடுங்கவும் ஊதிடு தாரை
உவாவென்று மாற மையமே சிங்கென்
றுரத்திப்பார்த் தொருநிலை நிறுத்தி
மதித்துமங் கென்று சுழுத்தி யிலேற்றி
வாசியுஞ் சுடரினிற் பாய
மனதுசஞ்சலத்தை நீக்கிவை ராக்ய
மவுனமாய்ப் பழக்கஞ்செய் வீரே. (86)

பழக்கஞ்செய் திடுமே சுடர்மணி யேறிப்
பாகமாய்ச் சேர்த்திடு மதுபின்
பாருமிப் படிதான் பழக்கம தாகப்
பதனமிவ் விதவாசி யோகம்
அழைகண்ட தாரை வழிபெரும் பாதை
அம்பிகை கொலுவிருந் தடியில்
ஆதிசத் தியமே அமர்ந்திடு மூலம்
அடிமூல சாதனை யதனிற்
பிழைவரு காமற் புளிகரு நெல்லி
பிடித்திடுஞ் சாரை வெண் ணமுரி
பேதமூன் றெழுத்தின் விபரமும் விளங்கப்
பெருமையை யுரைப்பதும் பெரிது
முழக்கமாய் மூன்றின் முதலெழுத் துரைக்க
மூலத்தில் அங்கென்று நாட்டு
முழங்குமே தாரை புளியது வாசி
முதலெழுத் திருத்தருள் வதுவே. (87)

முதலெழுத் தப்பின் நடுவெழுத் தரியு
முனைந்துமே சிங்கென்று உணர
முனைசுழி யறியக் கரையெழுத்தரியு
மூட்டிடு மங்கென்று உரைக்க
இதுமறைத் தனர்க ளினிபவா சியுமே
எழுத்தறி யாதென்ன பாவம்
என்குரு முனியால் விபரமாய்த் தெரிந்
தியல்பதை யுரைக்கவு மரிது
அதுவெழுத்தரிய அகாரமும் உகாரம்
அதீதமாம்மகாரம் மூன்றெழுத்தும்
அறிவித்த எழுத்தின் விபரத்தை யறிந்து
அடக்கமாய் வாசிகொண் டேதப்
பதம்பெறு மோட்ச பரமகை லாய
பதவிவந் தெய்திடும் பாரு
பார்த்திந்த வாசிப் பழக்கஞ்செய் திடவும்
பழம்பொருள் காலுங்கண் டுணரே. (88)

கருங்காலின் விபரம்

பொருளிது நாலும் புகலவும் பிரமம்
புளிமூலக் கருவிதா னென்று
புகழ்தரு மாலின் கருவியின் விபரம்
புனலெனு மமுரிதா னென்று
இருளது விலகும் எந்தைருத் திரருக்
கிசைந்தமே ருவின்சுட ரொன்று
இருப்பிடங் கண்ட தாரையில் வாசி
யிதுவிளங் கிடுங்கரு வொன்று
அருதிரு வுருவின் கருவிது நாலும்
அடக்கஞ்செய் தனர்பெரி யோர்கள்
அகஸ்தியமுனியும் எனக்கிதை புரைக்க
அடிநடு முடியது வாசி
குருவனுக் கிரகம் அடியனுக் கருளக்
குறையறக் திரையது விலக்கிக்
குசமசக் கிலாது மகத்துகள் மறைத்த
குருவெனு மறிந்துரைத் திடவே. (89)

நிஷ்டை கூடுதல்.

மருத்துக்கள் மறைத்த மவுன்பூட் டறிந்து
மனவிழி யமுரியே விளங்க
மதிசுழி மேவி மணியினிற் கூட்டி
வாசிகொண் டூதிட வசமாய்
வருத்துசோ றழிந்தால் ருசியது போகு
மதியது அழிந்திட லாச்சு
வருந்திமெ படிக்க வருவதேன் நாய்க்கு
வசப்படு காதிடிற் றேங்காய்.
தொகுத்துட னுடைக்கச் சுரணையுண் டாமோ
தொல்லுல கிற்றுரோ கியர்க்குச்
சொல்லது பலிக்கா தருமைதா னமுரி
தொடுத்ததாற் சாரையின் நீரைத்
தகுத்திடி லெனுமே பலிதம தாமோ
சற்குரு நிஷ்டையில் லாதோர்
சருகிடு மவர்க்கு இடியிடித் தாலென்
தரணியில் மழைபொழி யாதோ (90)

பொழிந்திடும் மறைதான் பொருத்தமில் லாமற்
புவிதனி லலைந்தலைந் துழல்வார்
புனலதி லண்ட பற்பமில் லாட்டாற்
புகன்றிடுந் தொழில்களும் பொய்யாம்
அழிந்திடா ததுவும் அண்டத்துள் வழலை
யகப்படா தடிநடு விரண்டும்
அருள் கொடுத் திடுமோ அதிசபூ ரணத்தி
லறிவுட னிருந்துமே பொருந்தி
வழியது மறிந்து வாழ்ந்திட லரியை
வாழ்த்துமூன் முதற்பிறந் தெழுத்து
வருஞ்சுழி நாட்டம் ஐந்தெழுத் ததனில்
வாசியு மெனுமறைப் பொருள்தான்
வெளியென்ன வாசி சுழிமுனை பிதுதான்
விளங்கிடி லறிவறிந் தூத
விதமென்ன மதிதான் நடுவனை மூலம்
மிகத்தெரிந் தறிந்ததி லூதே (91)

ஆசான் றோன்றுதல்.

உதித்திடும் வாசி யூசியின் முனைதான்
ஒளித்தனர் சுழியறி யாமல்
உண்ணாக்கை யறுத்து அலைந்திடு வோர்கள்
ஊழ்வழி யறிந்திடு வாரோ
விதிதவ மறிபாற் வேட்டைநா யதுபோல்
மிகக்குலைந் தருந்தவ மழிந்தார்
விசிதமூன் றெழுத்தை முன்பின்னாய் மாறி
மெய்ஞ்ஞானச் சுழிதிறந் ததனாற்
கதித்திடுங் கருநீர் கான்பதாற் பிரமை
கருத்தினிற் கசடெலாந் தீருங்
கனகமா மணிசேர் புருவமை யத்துக்
கடவுளின் தரிசனம் பார்க்க
மதித்திடும் பிரபை கணிபொளி வீசும்
மணிமுடி சுடரினில் வாசி
மதுரபே ரின்ப மமுதகோ சரத்தில்
மகிழ்ந்ததி செயமெனும் புகல்வார் (92)

வார்பசந் தருமன் னீரைக்காண் கினுமே
வலுத்திடுங் காயம்வச் சிரமாம்
வதுகனி பழுத்த வாறுபோற் சடலம்
மாகிடு மதிரவி யதனாற்
பாரினில் மாண்பர் பார்க்கதி சயமாம்
பழமது காய்து வாகும்
பகருமென் சான்வீ டதனில்வீற் றிருக்கும
பழம்புளி யமுரியென் றறியார்
பேர்பசுந் தருகண் பிறவிநீ ருதித்த
பிறப்பறி யாமலு பிறந்தார்
பிறவிதா னறிந்தா லறிவிதி லாசான்
பிரித்துரைந் திடுவதுங் கனவிற்
கார்கசிந் தருமன் னீர்விடுத் ததினாற்
கரமுடன் காலுமே யசந்து
கனபிணி சூழ்ந்து நரம்பெலா னும் விளக்குக்
கடுகிமாண் டிடுவர்க டானே (93)

தானெனுங் கற்ப சாதனை யறிந்து
சகலசிந் தனைகளு மகற்றிச்
சதுர்மறை யோர்கள் வசனந்தப் பாமற்
சாற்றினாற் சாபம்வந் தெய்தும்
ஆனென னுமல்லும் பகலும்வி டாமல்
அகாரமுமஉகாரமு மிரண்டும்
ஆண்டது பனிரெண் டளவினிற் சித்தி
அதீதம்வந் தெய்திடு முத்தி
மானென னுமுற்றி பொருநிலை யாதல்
வைராக்யநாள் மூத லளவும்
மாதவம் புரிநா லாண்டினிற் சித்தி
வருமொரு நாள்பிச காமல்
நானெனும் பகலு மிரவது மொருநாள்
நாளிகையெனுமறு பதுக்கும்
நாட்டமாங் கடிகைக் கிதுபிரசித்தி
நன்னெறி யாருளாந் தவமே, (94)

தவமி லாவிடில் வைராக்யம் நிலைக்கா
சத்துரு வினைப்பய னதனைச்
சங்கரித் திடுமே சாரமுங் காரந்
தனையன்றி வேறிலை புவியிற்
கவனமாய்ச் சொன்னேன் கனனியின் வயிற்றிற்
கருத்தரித் திடும்வகை போலக்
காசினி யோர்கள் கருத்தினி லுதிக்குங்
கதையிது வென்றெண்ண வேண்டாம்
புவனமா தீதம் நிறைந்ததா லொருவன்
பூட்டிது வென்னுறை புகலப்
புனிதமாஞ்ஜெனனம் வைராக்ய ஞானம்
புகழினைத் திறந்திடு மெவரோ
சவமதாய்ப் போகத் தந்தையின் விதியோ
சடமெடுப் பதுமரய் மதியோ
சாவது மிருக்க வளர்பிறை வருமே
சாட்சியிற் நூலறிந் திடுவே (95)

உலகநூல் படித்தும் பயனதை யறியார்
உண்மையாய் ருசியிட மறியார்
உடற்கரு வறியார் சடத்தினி லிருந்து
உதகமுந் தைலமு மறியார்
பலபல நூலும் படித்துமே யறிவார்
பதமெனும் பதமிலா தறியார்
பாதக ரிவர்தா னுலகினிற் பிறந்து
பதார்த்தமென் றறிந்துட னறியார்
அலையிடஞ் சுத்தி வருங்கார சார
அதின்பல மகிமையு மறியார்
அமுரியி னுப்பு அறிந்தறி யார்கள்
அப்புவி லுதித்தவுப் பறியார்
நிலவுசேர் வொளியின் நிரமய மறியாற்
நீந்தியே கரையேற மாட்டார்
நீத்தின மறியா ரிதுவென்ன பாவ
நெஞ்சமே யிவ்வுரை வினே (96)

அவயோகம்.

காணுமூச் சடக்கி விழியதை யுருட்டிக்
கபாலமுந் திறந்தனர் கோடி
கனத்தவாய் வதனல் குன்மகோ யணுகி
கலங்கினே ரவரொரு கோடி
தோணுமெய் மறந்து சுழன்றுட னெழும்பி
சொக்கினே ரவரொரு கோடி
சூலைவாய் வணுகி சுவாலையு மெழும்பிச்
சுரமதா லிறந்தவர் கோடி
ஊணுமுண் ணுக்கை யண்ணுக்கிற் றுக்கி
யுருண்டவ ரவரொரு கோடி
உயர்ந்துசா ணீளம் முழமது எழும்பி
யுறங்கியே யொடுங்கினேர் கோடி
பேணதி சார பேதிவந் தணுகிப்
பிறவியா லிறந்தன ர்கோடி
பெருமைபாய்க் கற்ப சாதனை யறியார்
பிராணனு மொழிந்துமாண் டனரே. (97)

இனமறி யாம லிருந்தியே வாய்வை
இறந்தன ரவரொரு கோடி
இனியதம் பனஞ்செய் தெழும்பியே கும்பித்
தேங்கினே ரவரொரு கோடி
கனமறி காற்றை நாசிபால் விடுத்து
கருதியே யிறந்தனர் கோடி
கண்டுகா சியைவிட் டொன்றவிட் டொன்று
கலங்கியே மடிந்தனர் கோடி
தினமொரு நாழி வாசிகொண் டேற்றிச்
சிவபுர மேவினர் கோடி
தெளிந்திடுங் கண்மூக் கெனுமதைப் பொத்தித்
தியங்கினே ரவரொரு கோடி
தனிபெரு விரலண் ணுக்கதை யேற்றித்
தயங்கின ரவரொரு கோடி
சலமதில் மூழ்கிச் சாதனை யதீதச்
சாவுவந் தெய்தினே ரறிந்தே. (98)

அறிவதிவ் வாறின் கருத்தினை யியம்ப
அவனிமாக் களிற்சில பேர்கள்
அம்புவி தனிலே மறையவுஞ் சூழ்செய்
யதனிலும் பதுங்கினோர் கோடி
சரிந்திடுங் குலையாற் கதலிதான் தவித்துத்
தளர்ந்தது போலவு மயங்கித்
தயங்கினு ரேங்கித் தரணியிற் சிலபேர்
தாமரை யிலையின்நீர் போலப்
பறந்தது பறந்து பார்வைகண் டதுபோற்
பாருல் கதிதமுந் தேடிப்
பட்டபா டிருக்கும் பரீட்சைகண் டறிந்தும்
பரிந்துபட் சணம்பண விலையோ
தெரிந்துமிப் பரீட்சை யுதாரண மநேகந்
தெளிந்தவ ரறிந்துமே செப்பத்
தேறிடும் வாசி யோகத்தின் பெருமை
திருத்தமா யுரைத்திட லாமே. (99)

வாசியோகத்தின்பெருமை

வாசியோ கத்தின் மகத்துவ முறைக்க
வகுக்கரே சகமதின் பிறப்பை
மாத்திரை முப்பத் திரண்டுமே வளமாய்
மாறவுந் தினந்தினம் நிறையாய்
வீசும்பூ ரகத்தி லறுபத்து நாலும்
விளங்கியே மாறிமா றிடவும்
விகற்பம்வந் தணுகா வாசிநின் றுலவும்
மெய்க்குறித் திறவுகோ லறிந்தால்ப்
பாசம்வந் தணுகாக் கும்பகந் தனிலே
பதினுரென் றறிந்துநீ திரும்பும்
பழக்கமதாகும் மகத்துகளுணக்கு
பரிபூரணனந்த தீட்சை
பூசித மாகும் வாசிதான் வசியம்
பொருந்திடில் கால்தலை மாறிப்
புனல்சொறிந் திடவுஞ் சுழியது நாடிப்
புகலவுஞ் சூட்சமி தாமே. (100)

மாத்திரைவிபரமறிய

நாடிடு மினிக்கேள் மகராஜ யோகம்
காட்டுவேன் வைராக்ய ஞானம்
நடத்தையென் றறிய வாசியோகத்தில்
நற்குறி விளங்கவும் நடத்தை
தேடும்பூ ரகத்தில் முப்பத்திரண்டு
சிவரேச கம்பதி னாறு
தெளிந்தகும் பக்கத்தி லறுபத்து நாலு
திருத்தமாய்த் தீருமிவ் விதமாய்க்
கோடுதப் பாமற் சுழிமுனை மேவிக்
குறித்திரு கண்ணது மேவுங்
கும்பியும் வாசி யொளியது வீசுங்
குறிப்பதா மொளியினிற் கூடிக்
கூடுமே யிதுதான் மகராஜ யோகம்
கொண்டுமாத் திரைக்கொரு தீட்சை
கோருமே யிதுபார் தலைசுற்றி நொடிக்கக்
குறித்தமாத் திரையுமிவ் வகையே. (101)

இவ்வகை யறிவை சாக்கிய சூஸ்திரம்
எடுத்துப்பார்த் தருள்வது யோகம்
இதுசுழி நாட்டம் இதுகற்பக் கூறும்
யெய்திடு மிதுவுமில் லாட்டால்
எவ்விதத் தொழிலு மெய்திடா தெனுமே
இருகற்ப முணர்ந்து கொள் ளளவும்
இவைராஜ யோக மெடுத்திட லாகும்
இருகற்ப மிதுவென்ன பிழையோ
செவ்வையா யருள ரசகெந்தி ரெண்டுஞ்
செப்பவொண் ணாதிதன் செய்கை
சித்தர்கள் மறைப்பு அகாரமோ டுகாரஞ்
செழித்திடும் பொன்வெள்ளி இதிலே
மூவ்வகைப் பொருளால் முடித்திடலாகும்
மூன்றிரு வாண்டில்மாற் றுறு
முறையிது கருக்க ளறிந்தவன் ஞானி
மூழ்வினை நம்பிடா தொன்றே. (102)

ஒன்றினி லிரண்டு மூன்றுவந் ததினு
    லொன்றில்கா லானதிவ் வாறு
உட்கரு மூலப் புளியது மமுரி
    யுருவினிற் சுடருங்காற் றிதுவாம்
நின்றால சதீக நேர்மைகண் டறிந்து
    நிகழ்த்தினு ரிதைமறை பொருளாய்
நீடுல கனைத்தும் வாழ்வதின் கருவு
    நேர்தெரிந் தனர்கோடா கோடி
மண்றில்நீர் நெருப்பு காற்றது நாலும
    மாறிட மாத்திரை பிசகாம்
மவுனங்கொண் டூதி தசமது தீட்சை
    வாழ்க்கையிற் ககனமு மாகுங்
குன்றினமேற் றீப மணிவிளக் கெரியக்
    குவலய மதீதமாஞ் சோதிக்
கொள்கைபார் ஞானக் கற்பசா தனைநூல்
    கூரந்திடிற் பாகதி முற்றும். (103)

வேறு சந்தம்.

கற்ப சூத்திரங் காணு முதற்காண்டம்
அற்பு தமுறை யாகும் நடுக்காண்டம்
விற்ப னங்கள் விளக்குங் கடைக்காண்டம்
தற்ப ரனருலாலிதைப் சாற்றினேன்.

முதற்காண்டம்முற்றிற்று.

உ

பரமபதிதுணை.

புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

கற்பம் 300.

நடுக்காண்டம் 100.

சீரு லாவிய தென்பொதி கையில்வாழ்
*மேரு சூழும கத்தியர் மெய்யருட்
பேரு றும்ஞான கற்பந்த னைப்பேசக்
காரு றுங்கரி மாமுகன் காப்பதே, (1)

ஞான கற்பம் நவிலுமுந் நூறையும்
வான வர்புகழ் மாமுனி வோரருட்
பான முண்ணப் பரகதி தந்தரு
ளானை முகனையெந் நாளும றவனே. (2)

சீர ணிந்த செழுஞ்சடை மேவிய
நார ணிப்புவ னம்பிகை பொற்பதம்
வார ணிந்த மதிநதி சூடியக்
கார ணிந்த கங்காளனைப் போற்றுவாம் (3)

அண்ட பிண்ட மளாவிய வைந்தரு
நிண்டி லங்கும் நிராதரத் துட்பொருள்
குண்ட லீநற்கு கணேப்ப ணிந்துமுன்
விண்ட மாமதி விந்துவைப் போற்றுவாம். (4)

விந்து நாதம் விளங்கு மகந்தனில்
ஐந்து ருப்படி யாதலா லெம்பொறிச்
சிந்தை வாழ்சிவ யோகிக ளுற்பன
நந்தி பொற்றாள் நலம்பணிந் தோதுவாம் (5)

*மேரு= ஆசவிபீடம் அதாவது பெரியோர்கள் நெய்வார்த்து வேள்விசெய்தலு மானஓர் அதிசயபீடம் ஆசு X அவி X பீடம்.

வாலை குண்டலி வல்லபை யாகிய
மூல வாசி முனைச்சுழி முன்னமே
ஆலமுண்ட அரனருள் பெற்றிடக்
காலை மாலை கதிர்மதி காப்பதே. (6)

நூல்

கதிரொடு மர்மதி காரமுஞ் சாரமாய்
அதிவித நாதாந்த அடிநடு மூலமும்
மதிவிந்து கோசம் மருமவழி தாரையில்
நதியிருந் தப்புவும் நாடிப நாமமே. (7)

அப்புடன் மால்திரு ஐவகை நீரதாஞ்
செபபவொண் ணுதிரு மாலுக்க டிமையாம்
ஒப்பனை யப்புவாற் கற்பமோ ராண்டினில்
எப்படி யாகிலுஞ் செய்கற்ப னையதே. (8)

கற்பனைச் சொற்றவ ருமற்கரு திடில்
அற்பமென் றேற்றி யகற்றிடு வாமலுந்
தற்பரை யாகிப சார மமுரியால்
அப்பனைக் கண்டு அருள் பெற்று லாவுமே. (9)

அருள்பெற்ற விந்த அரியதோர் காரமாய்ப்
பொருள்நில வுப்பைப் புசிக்கப் புசிக்கவும்
இருள்பற்றி ருந்தவெண் சானுடல் தனில்
மருள்விட்ட கன்று மதிநில வாகுமே. (10)

மதிநிற மாகிப மாமதிச் சாரமே
நிதிமறை நூற்படி நேர்பிச காமலே
துதிசெய் தினஞ்சர மாறித்தொ டுத்திடும்
விதியின படிவந்து விட்ட குறையிதே. (11)

முதற்றிங்கள்.

விட்ட விதிப்படி விந்தரி சாரமே
தொட்டிடும் வித்து தொடுத்தொரு திங்களில்
அட்டுப்ப தின்குண மாறிட மாறிட
எட்டிப்பானன் சசிறி யுனதப்பனே. (12)

எட்டி யபானன் எகிறி யுதைப்பதால்
முட்டிமூ லாக்கினி மும்மலச் சூடுதான்
தட்டுமுட் டாகிச் சம்மான னுஞ் சீறிடில்
அட்டியில் லாமல் அதியுஷ்டண மாகுமே (13)

அல்லல் வெம்பல் அடிக்கடி பேதியால்
தொல்லை வாராத் தொடுத்திடுஞ் சாரமூங்
கொல்லும் வாய்வு கோடுரே மதுவிட
நல்ல தோரொரு வேர்க்கொம்பு நல்கிடே. (14)

இரண்டாந்திங்கள்.

நல்குஞ் சாரய நமனைக் கெடுத்திடும்
எல்கும் நோய்வினை யேகிடு மாதலால்
ஒல்கும் வோரிரு திங்களி ரண்டினில்
வெல்கும் பானன் விகற்பம் நினைப்பனே. (15)

நினைப்ப தென்னமூ லச்சுழி நாபியில்
வினைப்ப யன்மிக வேதனை யாகிடும்
இனைப்ப திந்து இபல்வத முரியால்
அனைப்பட தொந்த மடிக்கடி மாறுமே. (16)

மாறமாற மதுபானச் சாரையில்
ஊறும் வாத மடக்கியஞ் சூட்டிடும்
வேறு வாத வினைப்பித்த மோடியே
தேறுஞ் சாரைநீர் சித்திய தாகுமே. (17)

மூன்றாந்திங்கள்

சித்தி யாதல் திரிமூன்று திங்களில்
எற்றி வாயுவு எகிறியு தைக்குமவ்
வுத்தி சத்தி யுடலாதி நோயதும்
வற்றித் தேகம் வயிறு பொருமலே (18)

பொருமப லாதற் புகைவிழி சூடதாம்
அரும்ப மேகமும் ஆக்கைய ரிப்பதாய்
விருப்பு வாரி விடாமல டிக்கடி
திரும்பத் திப்பிலி திரிமூன்றுங் கூட்டிடே; (19)

கூட்டும் வாரி குடோரத்தின் வாய்மையால்
ஊட்டும் பித்தமு முஷ்ணமு மேகிடும்
வாட்டுங் கைகால் வலிக்குஞ் சலிக்குமச்
சூட்டினால் வயிற் றுர்ப்பல னாகுமே. (20)

பால னுவது பானமே யுண்டிடிற்
கால னோடிக் கடல்புக் குவானதால்
வாலை சஞ்சீவி லாருதி யாற்சடம்
ஆல கால மழுரிய தாகுமே. (21)

நான்காந் திங்கள்

தாவி நாலுஞ் சதுர்திங்கள் மாமதி
ஆவி சோர அழுரிய டிக்கடி
மேவி யுண்ணவினை களு மோடிடும்
பாவி நோய்கள் பகைத்திடும் பாருமே. (22)

பகைக்கும் பானன் சமானன் றனஞ்செயன்
வகைக்கு மூவரு மல்லூதி யங்களால்
திகைக்கு மெண்சாண் திசையெட்டு மோடியே
நகைக்கும் வாதபித்த சேத்தும நாடியே. (23)

சேத்தும நாடி செழுங்கனல் மீறியே
ஆத்தும மெல்லா மருந்தண லாகிடும்
மாத்திதற் கில்லை மருந்தே யழுரிதான்
பார்த்தெழு பத்தும் பகையது மாறுமே. (24)

எழுபத் தீராயி ரம்நரம் போடினுற்
பழுவெ லும்பிரு பக்கமு ளைத்திடும்
அழுதல் துககம் அசைதனு ளைந்திடும்
தழுதல் தேகந் தடித்துக் கடுக்குமே. (25)

கடுக்கும் வயிறு கைகா லுளைந்திடும்
வெடுக்க தாய்ச்சட மெய்வாய் வெளுத்திடும்
ஒடுக்கம் நாடி யுடலெங்கு மூதலாய்
தொடுக்கும் புண்கள் துயரம்வைப் பார்களே. (26)

துயரமேது தொத்திடுஞ் சாரையால்
வயிர மாகு மதுகடுக் காய்ப்பொடி
சயில வாரிவெண் சர்க்கரையே மேல்மருந்
துயிர்பலக்கு முடன் கொள்ளுவோர்களே. (27)

கொண்டு மாறக் குணகுணங் கூறிடில்
கண்ட நோய்கள் கடல்புக்கி ஏகுமாஞ்
சண்டனேது சடத்தைவிட் டேபிரிந்
தண்ட ரண்டமு மக்கினிப்ர வேசமே. (28)

ஐந்தாந் திங்கள்

அக்கினி யாலழி யாதுப்ரா ணலயம்
விக்ரம மஞ்சும் விளங்கிய திங்களில்
உக்ர தாது உருகிநீ ராகிடுஞ்
சக்ர வாளமுஞ் சர்க்கரைவெண் சாரையே. (29)

சாரை நீரைச் சரமாறி யேற்றிடில்
தாரை கோசந் தடித்துப்புண் ணாகிடும்
மார சாரணை மாமதி கொண்டிடில்
ஏரத் தொந்த மெரிப்பந்தங் காணுமே. (30)

எரியுந் தேகமெண் சாணுடலா தீதம்
விரியுங் கண்ட மிகவும்புண் ணாகிடும்
துரிய வேகஞ் சுரங்குளிர் கண்டிடும்
தெரியு மேதனு நீர்க்கடுப் பாகுமே. (31)

நீர்க்கடுக்கும் நினைப்புவே றாகிடும்
தூர்க்குந் தூர்ப்பலத் தூக்கம தால்மனம்
வேர்ப்ப பல்பிணி வியானனுந் தானனுங்
கூர்மன் நாகன் குணகுணங் காண்பதே. (32)

காண்ப தேது வியானன் சொரூபமே
சாண்வ யிறுமே தான்விம்மிப் பேதிபாம்
வீண்ப தரிலோ வெடித்துட டம்பெலாம்
ஊண்பு சிப்பை யுதானனொ ழிக்குமே. (33)

ஒழிக்குங் கூர்ம னுடம்பூதி நித்திரை
விழிக்கு மேவிழி மெய்மறந் தாக்கையுங்
கழிக்கும் நாகன் கனலினல் மெய்க்களை
முழிக்குந் தேவதத் தன்முன்னந் தானுமே. (34)

தேவ தத்தன் தியக்க மயக்கமாய்
ஆவ லாகிரி யதிதமுண் டாக்கிடும்
பாவ புண்ணியப் பற்றுல்ந டப்பதாம்
நாவ தீசர் நடிப்புமுண் டாகுமே- (35)

உண்ட வன்ன முடன்செரி யாமலுங்
கண்ட தாரை கனத்துமே ஊதிடுமே
விண்ட பானன் விளங்கிய நீரினிற்
கண்ட திப்பிலி கையான் பொடியதே. (36)

கண்ட திப்பிலி காற்கழஞ் சேபொடி
கொண்டி டுஞ்சமன் கோழைப கற்றிடும்
மண்ட லமதில் வாய்க்கும தற்கப்பின்
விண்ட பானன் வியாதி விபரமே. (37)

விவர மாமஞ்சு மேவிடுமேல் மருந்
தவறி டாமலுந் நானஞ்சு பட்சமும்
புவியி லோர்க்குப் புகலொரு திங்களில்
நவிக்கு மண்டலம் நற்குறி யாவதே. (38)

நற்குண மென்னும் ரத்னதி கற்பமே
சற்குண மென்னுஞ் சற்புத்ர னுகவுந
துற்குண மையல் துரோ தகைஆசைவிட்
டெற்குண யோ னியாசையை விட்டிடே. (39)

யோனி யாசை யொழியாத பாவிகள்
மானி லத்தோ ருயிர்மறந் தேகிடுந
தான னிமயல் தான்விட்ட சற்றியே-
ஞானி னிச்செயும் ஞானகற பமிதே. (40)

ஞானி யாவது நற்புத்தி மாந்தரில்
யோனிக் கேணியி லுற்பத்தி யானராய்
வானுதானு மடந்தைய ராசையில்
தானுழலத் தவறிடுங் கற்பமே (41)

தானு மூன்று தனியே தவிப்பர்கள்
பான முண்டு பழக்கந் தவறிடிற்
சோனை யாய்வடிந் தேனுற்ப ல்லகொண்டு
மானைப்போல்புவி மாக்கள்மாள் வார்களே. (42)

தேகசித்தி

மனித ராகி வடிவெடுத் தங்கனே
புனித னுய்ச்சிவ போதனை பூண்டுபின்
தனிய ஞானத் தவம்பெற் றுலகில்வாழ்
இனிய சாரை யியல்புகண் டோர்களே. (43)

சாரை நாகந் தனையுரு வாக்கிடிற்
பேரை யானருட் பேருல கந்தனில்
நீரை யுண்டு நிரந்தர சொரூபமாய்
வேரை யுண்டவி வேகி யிவர்களே. (44)

வெண்சாரை

வேக மாகிய வெண்சாரைப் பாம்பிது
போகத் தாசை பொரிந்தா திதற்குமுன்
னுக மத்தோ ரமரியாம லாத்மதத்தி
ரேக சித்தியாற் சித்தர்க ளாவரே. (45)

ஆறுந்திங்கள்

தேக சித்தியாந் திங்களோரா றினில்
நாகப் பாம்பு நடுவெனுஞ் சாரையைத்
தோகைப் பாலெனுஞ் சோமப்பால் வாரிதான்
காமப் பாலுண்ட கருத்தை யழிக்குமே. (46)

கருவி யாற் பானங் காலாகா லங்களுங்
குருவா யநுதினங் கொண்டுடன் சாரணை
வருவ தோர்பான மாறச் சரமாறி
சுருவா யனலினுற்சுரம்வந்த ணுகுமே (47)

அணுகு மூலத்தி லனுசரிப் பதுவெனுங்
குணமுந் திரிகரன் கூடப்பெரு ருந்திடில்
மணங்க லந்தம லமிக வாகிடும்
நிணமும் வைத்துநீர் நெஞ்சுபுண் ணுநூமே. (48)

வேறு

நெஞ்சு முணர்ந்து நெறிதவறி
நீருய் வெதுப்பும் வேர்வையுடன்
பஞ்ச மேதபோற் கைகாலும்
பதறி நடப்ப துங்குறையும்
வெஞ்சொற் றவறி மதிமயக்கும்
விக்கல் கக்கல் விதவிதமாய்
நஞ்சு ணர்வோர் பரிட்சையெனும்
நளிர்வாங் குளிர்சுர மதுகாணே (49)

காணு மடிக்கடி பலபேதி
கடிதாய்ச் சுரந்து வயிறாதும்
வீணுக் கேமுன் வினைப்பயனும்
விதியா யெழும்பு மதியதனல்
ஆணைப் பிறப்போ ரிக்குறிகள்
அமுறி யதனு லதீதமுறுந்
தூணைத் தொடுக்கச் சரமாறிச்
சுகமாய்க் கொள்வீர் சாரணையே (50)

சுகமாய்க் கொள்வீர் பானமதிர்
சுறுக்காய் மிளகு திப்பிலியும்
அகமாய் வேர்க்கொம் பதுமூன்றும்
அனலில் வெதுப்பிச் சரிசமமாய்த்
தகுமாம் பொடியாய்ச் சூரணித்துச்
சார நீரி லுடன் கொள்ள
உகையாய்ப் பட்ச மூடனறுத்து
ஓகோபிணி ளோடி டுமே. (51)

பச்ச முணரப் பலநோய்கள்
　　பறந்தே உடல்விட் டகன்றிடுமாம்
நச்சத் தாவின் பாலுரை
　　நமனு டும்வினை நாடாது
நிச்சய மிந்நா லிரத்தினமாம்
　　நிகழ்த்து மூந்நா ளுய்ந்திடிலோ
அச்ச மிலலா வாழ்வுமிகும்
　　ஆறு திங்க ளதிசயமே. (52)

ஏழாந் திங்கள்.

திங்க ளேழிற் சாரணை தான்
　　திருதத மாமதி சரமாறி
மங்கையர் மீதில் நினைப்பாகா
　　மதிப்பா லுணர்ந்து மகிழ்வீரால்
அங்க மதனில் மூலாக்கினி
　　அனல்கொண் டெழுப்பி ஆகாசம்
பங்கப் படுத்துந் தசவாய்வும்
　　படுக்கையில் முடக்கும் பலவினையே. (53)

வினைநோய்ப் பிணிகள் மிசமீறி
　　வெடுக்கென் றனல்கொண் டருப்பாகி
சுனைநீ ரரிவி மதிபெருகித்
　　தொடுக்கச் சரமாறிக் கனைக்குஞ்
சயமுங் காச முறுங்கபமுந்
　　தானே கோழை வருவதுமாய்த்
தயங்குந் தெரியச் சர்வாங்கந்
　　தணலாஞ் சுரமுந்தலைப் படுமே. (54)

தலைநோய் சிரசிற் சடசடெனச்
　　சரமாய்த் தொடுக்கு மிடிமுழக்கம்
வலிவாய் மயக்கும் வயிற்றுநோகும்
　　வாய்தா ளிரண்டுந் தான்பிடிக்குங்
கலையா மனது முறுதியிரா
　　கைகால் கடுக்குங் கண்கூசும்
நிலையாய்க் குலைநோ யடிக்கடி தான்
　　நினைவா யிருந்து நிகழ்த்திடுமே (55)

நினைவா யமுரி தினந்தோறும்
நிலப்பனை யதுவின் கிழங்குலர்த்தி
இனமாஞ் சுக்கு மிளகுடனே
இதமாயமூன்றும் சரிசமனாய்
இனமா யிடித்துச் சூரணித்து
இச்சூரணத்திற் கழஞ்செடையாய்
நினைவா யமுரி தனிற்கொள்ள
நீள்கடல் புக்கிடு மப்பிணியே. (56)

பிணியா வதுவே தீவினைதான்
பிரியா துடலிற் பிறவியதாஞ்
சனியா வதுவுஞ் சடமதனில்
தனக்குத் தானாய்ச் சஞ்சலங்கள்
அணியா யமதா யவதரிக்கும்
அமுரியினாலலை கடல்புக்கும்
பணியா வதுமே கர்மேகம்
பறக்கு மதும்பாற் பாரீரே. (57)

எட்டாந் திங்கள்

பாரீ ரெட்டாந் திங்களிலே
படுக்கு முடக்கு மாயிருக்கும்
வாரீர் வாயுவு வாதபித்தம்
வைராக் கியங்கொண டம்மூலம்
சேரீர் திடுக்கிட்ட தாவிழிகள்
திசையுங் கலங்கித் தியக்கமுறுங்
கூரீர் மந்த நித்திரையாற்
குறிப்பாய் மயக்கக் குணமிதுவே. (58)

இதுவே யினிதா னறிவாகும்
இளைப்பா மசதி யிளமசக்கைப்
பதியேழ் பதினை யிரநரம்பும்
பசுமை நிறங்கொண் டீதமுமாய்
மெதுவாய் நடக்கு மிடுப்புளையும்
வெறிகொண் டவர்போல் விழவாகும்
அதுவாய்க் குரல்மெது வாகிவிடும்
அனல்கொண் டெரியும மறிவீரே. (59)

அதிமதுர அமுரிகற்பம்

அனல்கொண் டதுதான் அகலவுமே
 அதிமது ரத்தொடு வேர்க்கொம்பும்
கனலோ டிடவு மிளகரத்தை
 கருதி விடுசரி சமன்கூட்டிப்
புனல்சூழ்ந் திடவே வறுத்திடித்துப்
 பொடியாய்ச் சூரணம் புகல்வீராய்
இனமா யமுரி யின்னீரில்
 எடுத்துக் காற்கழஞ் சிடுவீரே (60)

இவ்வா யமுரி தனிலுண்ண
 இருவினையாலெய் திடும்நோய்கள்
நடுவனை யாலன் னசித்தோடும்
 நமனும் கருகி நடுங்கிடுவான்
படும்பா டதிசய விதமறியாப்
 பகர்வாய் பாணஞ் சரமாறி
விடுவாய் மதிசர பாணமதால்
 விதியை வெல்லுமிவ் வஸ்திரமே. (61)

வெல்லு மமுரிபஞ் சாக்ஷரமே
 மிகவு மேன்மருந்த துவூட்டக்
வெல்லுந் தானு மதைக்கொண்டார்
 விதமாந் தோஷ முனக்கேது
அல்லும் பகலும் விடாமலுமே
 அமுர்தசஞ் சீவி அஸ்திரத்தால்
மல்லுந் தியமாய் நடுவனையை
 மாறிட மாறிட ஜெயமாமே. (62)

அமுரியின் பெருமை

செயமா யமுரி தெளித்திடலாந்
 திறமாய்ச் சடலஞ் சித்தியதாஞ்
சயமுங் காசமும் வாதபித்தங்
 தானே பறக்குஞ் சிலேற்பனமும்

மயகா மியமத மாச்சரியம்
மதிநீ ரதுசஞ் சீவியுணா
டயமுமங் கிலேசமு மேகிடுமே
பாரீர் மகத்துவம் பண்போரே. (63)

பாரா மனுமே பாடுபடாப்
பலவாய் மொழிகள் படித்துலகிற்
தேரு மனுமே சிலநூல்கள்
தெளிந்தா ரதுபேற் றெளிந்தவர்போல்
தோரா மனுமே வாய்ஞானந்
தொடுத்தே தொடுப்பார் சரமாறிக்
கூறு ததுநூல் குவலயத்திற்
குறுநூல் போலக் கூறுதே (64)

குருநா லிதுவாம் முந்நூறுங்
கொடுக்கார் கோடி தனமீய்ந்தும்
அருள்பெற் றமிசை மதுவிருந்தால்
அமைப்பா லமைக்கு மருட்பொருளும்
இருளும் விலகு மிராப்பகலா
மிறப்பும் பிறப்பு முடன்போச்சு
மருவுந் தீக்ஷை கங்கைதனை
மதியா லறிந்து மகிழ்வீரே. (65)

மதிசந் திரபுஷ் கரணியதை
மறைத்தார் பெரியோர் மகத்துக்கள்
விதியா வதுமதி யறியாட்டால்
வேறென் றறியார் புவிமீதில்
துதியால் ஞானச் சுகாதிதமாஞ்
சுயம்பிர காசச் சுடர்மணியே
நிதியாய் விளங்கும் நதியறிந்து
நீந்திக் கரையேற மாட்டாரே. (66)

அறியா ரரவ மதின்விடமே
அரனுண்ட முத மறியாமற்
பரியா சமதா யுலகோர்கள்
படிப்பார் வெகுநூல பரிபாஷை
வெறியாய்ப் புராணம் வெகுவாஞ்சை
விதியாம் விவர மலேவதுமாய்க்
குறியா ரரிவ ரறியாமற்
குருநூ லறிந்தாற் குருவாமே, (67)

ஒன்பதாந் திங்கள்.

குருவா யமைத்திடும் ஞானகற்பங்
கூறூர் குவலயத் தோர்களுக்கு
ஒருவா யொன்பது திங்களினில்
உளேக்கும் வயிறுநோ யுடல்பெருத்துங்
கருவாய் மலர்ந்து கனத்துடனுங்
கமல மலர்பூ தியல்பாகிப்
பெருவாய் மலர்ந்து தானிருக்கும்
பிராண வாய்வதைப் பேசுவமே, (68)

பேசார் பெரியோ ரிதன்பெருமை
பிராண வாயு வெழுந்தோங்கி
ஆசா னுமேபா லடிவயிற்றில்
அரண்டு உருண்டு கிடுகிடென
மாசாந் தரமொன் றதுமாச்சு
மார்நோய் கானு முடன்வாந்தி
நேசா நேசப் பிராணனுமே
நெடிய வுதைத்து நெகிழ்ந்திடுமே. (69)

அபாயமெனும ணுகாதுடலில்
அனல் கொண்டக்கினி சிரமேவி
உபாயத துடனிரு கன்னமது
உளேக்கு மிடிக்குங் கடுக்குமப்பாற்
சிவய நமவெனு முயிராகிச்
செழித்து வலுத்துடன் பரமாயித்
தவமாய்த் தவப்பய னீடேறுஞ்
சண்டைனு மனுகா வுடலாச்சே. (70)

சண்டனு மனுகா னுடனுயிர்க் காயஞ்
சரிவர வலுத்துப்பின் பொல்லாத்
தைலர் மாய்கை நிதம்பத்தி னுசை
தவறுண்டு தானது போச்சு
அண்டபிண் டமதா முடலின்க ருவிகள்
அனைத்தும்வச் சிரமதாம் வலுவாய்
அறிபுவி யாசை யதனைவிட் டொழித்து
ஆண்டொன் றிற் சிறுபிள்ளை யாகி
எண்டிசை யனைதனுங் கீர்த்திபெற் றியல்பாய்
எழுபத்தீ ராயிர நரம்பும்
இறுகிடு மெழுமவ் வயமனுக் கதிதம்
இலக்கமெ உறுதியா மிந்த
மண்டலந் தனிலே மனுக்களும் வணங்க
மாற்றிய தேகம்வே ருச்சு
மகத்துவ மாச்சு நிரந்தர ரூபம்
மனிதரில்த் தேவனு மாச்சே. (71)

நிறந்தர ஞானந் தானது வாச்சு
நிருவிகற் பம்மிகப் பெருமை
நேர்மையோ ராண்டிற் பூருவ க்ஞானம்
நிலைத்துமெய்ஞ் ஞானமும் வலுத்துப்
பரஞ்சோதி வாலை கிருபையி னருளாற்
பற்பல பிணிகளும் போச்சு
பசும்பொனின் நிறமாய்ச் சூட்சம தேக
பாலனைப் பிறந்துபா ரதனில்
வருமுத்தி யீசன் அருள்நின் றிலங்கும்
மதியெனு மமுரியாற் காயம்
வளர்பலமுற்று இரவியின் ஒளியாய்
வர்ணமுண் டாகிமென் மேலாம்
இருள துவிலகி பிறப்பிறப் பற்று
ஈஸ்வர னெனும்பிறப் பாகி
இருவினை யொழிந்து இருப்பரெந் நாளும்
இனியபத் தியமதை யுணர்வாம். (72)

இனியபத் தியமாஞ் சிறுவர்க ளமுரி
ஈரொட்டுப் படியதாங் கணக்காய்
இசையநற் பாண்ட மதனில்விட் டதிலே
இணையிலாக் கற்சுண்ணம் நீறும்
தனியெட்டுப் படிகொண் டமுரியிற் றூக்கிச்
சங்கையில் லாமலேக ரைத்துத்
தனியவைத் ததனை மூன்றுநாள் ரவியிற்
றாணிமா னிடர்களு மறியாப்
பனிரவி காற்றும் வனிதயர் நிழலும்
படாமலி ரகசிய மாகப்
பாகமாய்ச் சதுர்நாள் பாண்டமாஞ் சில்லு
பதிந்தபின் தெளிந்தநீர் வாங்கி
வினயமாய்ப் பாண்ட மதனில்நீ யூற்றி
விபரமா யடுப்பினி லேற்றி
மிகவுட னனல்கொண் டக்கினி வீச
மிதமதாய்த் தீயெரித் திடுவாய் (73)

எரித்திடு மனல்கொண் டிடைவிடா தெரிக்க
இரைச்சலிட் டதுநுரை யெழும்பும்
இனியநீர் சுண்ட யாவரு மறியா
தெண்ணெயை யெடுத்துவிட் டினிக்கேள்
குருவைநீ பணிந்து குறித்துடன் பதமாய்க்
குறு முனி கிருபையி னருளாற்
குறையேதும் வாராச் சாரநீர்க் கங்கை
குணுகுணங் களையுரைத் திடவுக்
துரிதமா யமுரி சலமெனு மயமாய்ச்
சுடரதின் நாவினால் வனுத்துத்
துய்யவெண் ணிறமாய் கந்தியுப் பெனவே
சொல்லவும் பலபேர்க ளறியாக்
கரியவிந் துப்பின் மகிமைகற் பத்துக்
காமனுப் பானமாங் காரங்
கணக்குடன் சொல்வேன் கரியுப்பு ஆதி
கருதிய பிறவி மூன் றுமே (74)

பிறவியின் வாழ்க்கை வாருதி யுபபாற்
பின்புதான் கறியுப்புண் டாச்சு
பெலத்துப்பின் னதனுல் அமுரியுப் பாச்சு
பிசகிலா மற்பாண்ட மதனில்
இரவியுப் பேய்ந்து இறகஇயே வைத்து
இயல்பதாய்க் குப்பியி லிட்டு
இனியதோர் பாக மடிக்கடி யினங்கொள்
இந்நாள் முதலீரஞக ஆண்டு
மறலிமாண் டிடுவான் வினைகளு மொழியும்
வலுத்திடுங் காயமும் வைரம்
மாய்கைவிட் டகல இருவினை பிரிய
வுகையந்தப் படியறிந் துணர்வாய்
பரையெனும் வாலை ஏகவஸ் ததனுற்
பத்திய மதுபகர் வதைக்கேள்
பாசியின் பருப்பு கருக்குரு வரிசி
பசுவினபா லுடன்நெய்யென் றென்னே. (75)

எனனவே மிளகா மினியசீ ரகமாம்
இன்னமுங் கரியவேம் பதுவாம்
இணையிலாக் கொடுக்காப் புளியது நலமே
இசைந்தபத் தியத்துக்கி தாகும்
இன்னவை யர்கா திறைச்சிமீன் கீரை
இகழ்ச்சியாந் தாம்பூலஞ் சுண்ணம்
இலைகறி காய்கள் வஸ்துகஞ் சாவும்
இலகிய பனையதின் பாலும்
மின்னிடுந் தென்னை விருட்சத்தின பாலும்
மிகுநடை பனிமழை வெயிலும்
விளங்குகூக் குரலும் நித்திரை கொளலும்
வேண்டுமெண் ணுசையு மகற்றி
அன்னவை யோடு நல்லெண்ணெய் விடமாம்
அணுகினுல் மாணமவர் தமையும்
அகத்திய ருரைத்த அனுபவ மிதுதான்
அடக்கமா யிருப்பது நலமே. (76)

இருப்பதென றூறு மிடம்பொருளேவ
　　வியல்புட னொருவேளை யன்னம்
இகவிலா வின்பால் கிடையாமற் போனால்
　　எண்டிசை தனில்வண மேயும்
விருப்பமாய் வெள்ளை யாட்டின்பா லதுவாம்
　　மேதினி தனிற்கொடுக் காயின்
விபரமாம் புளியா மதுகிடை யாட்டால்
　　விசிதமாம்புளியிலைத் துளிராம்
அருப்பது மீறும் அதீதமாம் பிரதம்
　　அசடதாம் புகையிலை யகற்று
அதுஉள்ள அளவும் எரிதலுண் டாக்கும்
　　அநேகநோ யமைத்திடும் அறிவாய்
வருததும்பல் பிணிகள் இறைச்சியுண் டுணர்ந்தால்
　　வாயுவால் வதையுறுங் கடுப்பாம்
மச்சமுண் டுணர்ந்தால் வயிர்வலி குன்மம்
　　வருமினனுஞ் சூலையின் னரிப்பே. (77)

அரிப்பதுண் டாகும் அதீதவுஷ்ணமுமாம்
　　அனலினுல் விறுவிறுப் பதுவாம்
அகற்றிடு மிளகா யநுபவித் துணர்ந்தால்
　　அதிகவா தங்கள்வ யிறுநோய்
வரிப்படும் பிராணன் வலுக்குஞ்சீ தளமாம்
　　மறுகிடுஞ் சுரமெனுந் தோஷம்
வஸ்துவை யுணர்ந்தால் மூல்ச்சூ டதிதம்
　　மலத்தினிற் கிராணியுண் டாக்கும்
பிரிந்திடுஞ் சிலேத்மம் பனையதின் பாலாற்
　　பிணியதாங் கால்கா முடக்கும்
பேசுவோ மிருமல் அதீதமுண் டாக்கும்
　　பிராணனை வதைத்திடும் பலமாய்க்
கரிந்திடுந் தென்னை விருட்சத்தின் பாலைக்
　　கருதினுற் சோகையும் பாண்டுங்
கனத்திடுந் தேகம் வெளுத்திடுங் கொடிய
　　கனலின்வெஞ் சுரமுமுண் டாமே. (78)

கனலது மீறும் பாக்குவெற் றிலையும்
கற்சுண்ண மிவையனு பவித்தாற்
கண்டததிற் கோழை சிலேதமமுண் டாக்குங்
கடைவாயின் பற்கள்வே ரகலும்
புனலும்வே றுருகுந் தனுவெனுங் கோசம்
பொரியுமுண் டாக்கும்நீர் கடுக்கும்
புதுமையாய்ச் சுக்கிரன் கல்கொண்ட டைக்கும்
பொல்லாத்தீ பனத்தையு மடைக்கும்
நினைவுவே றுரும் பிணியுணர்ந் தாக்கால்
நிணமெலா முதிரநீ ராக்கும்
நிகரிலாப் பேதி யனுதின மிகவும்
நேர்நிலை வேறுருகும் நிசமாம்
வனிதைய ராசை மயலையுண் டாக்கும்
வயிறுக டுத்தனு முஷ்ணம்
மாரியில் நடந்தால் கொடுமையாஞ் சுரமும்
வந்துடன் லபித்திடுங் காணே (79)

லபித்திடும் ரவியில் நடப்பதும் நடந்தால்
நாவினில் வரட்சியுண் டாக்கும்
நமையது மதிகம் வேர்வையுண் டாதல்
நன்விழி கீதமும் பாழாஞ்
சபித்திடுந் தாபம் மோகம்வந் தனுகுந்
தணலிறை் கோபமாஞ் சுரமுஞ்
சங்கையுண் டாதல் தலையிடி யிடிக்குந்
தாதுவிற் சுவாலையு மதிகங்
கபமது வழங்குங் காற்றினிற் கதித்தாற்
கருவிக ளாந்தொண் ணூற் றுறுங்
கால்கர மசதி உதிரஞ்சுண் டிடுதல்
கல்லடைப் பதுவுங்நீர் கடுக்குஞ்
செபித்திடும் பிணிவந் தடுக்குமா ரோகிகள்
தினந்தினம் வெள்ளையோக் காளஞ்
தேகத்திற் குடைச்சல் நாசிநீர்ப் பரய்ச்சற்
செலதோஷஞ் சிரசிலுண் டாமே. (80)

கற்பமுண்ண நாள்.

வேறு.

உண்டுணர்வ தாகியுல கந்தனி லுயர்ந்த
கண்டுமது சாரையெனுங் கற்பமுண் ணு வீரேற்
பண்டியல்மு தற்பிறையாம் பௌர்ணமியின் நாளில்
உண்டுமுன் றாம்பிறையி லுன்னதமதாமே. (81)

உன்னித மறிந்தமுரி உற்பனம தாகில்
இன்னித மிருத்ததொழி லின்பெருமை காண்கில்
அன்னிய நிமித்தமது யாரறிவர் சித்தர்
வன்னிமதி கற்பமுணர் வாலேவய தாமே. (82)

மாது அபி ராமியருள் மலர்க்கமல மீதிற்
சாதுவயி ராக்யசுழி சந்நிதியின் மூலம்
வேதமெனுஞ் சுத்தகாச மாமதியின் சூட்சம்
பேதமற விந்ததித பிரபலமதாமே. (83)

விந்ததித வாருதியில் மேருவெனுஞ் சாரல்
அந்தபதி சாகர மடுத்தகரை யோரம்
வந்தநர நீரிலுரை மானகரிற் சோணர்
அந்தணரின் முத்துணர்வ தாகிலது வாமே (84)

முத்துகளில் ரத்னவகை முப்பொழுது முணர்வார்
முத்தொழில்க டுத்துதிரு முத்திதனை வாரிச்
சுத்தமதி பாரைகள்தொ டுத்தகட லுள்ளின்
உத்தமரி சைந்துலகி லுத்தமமென் பாரே. (85)

உத்தமக டற்குருவின் உங்கதனைக் கொள்ளல்
இத்திசையிற் பண்டிதர்க்கி சைந்தவிழ்த மென்க
மத்துவர்கள் வாதியெனு மானிடர்க்காய் நீருள்
வைத்தபொரு ளீசனு மமைத்தபொரு ளாமே. (86)

பொருளுறுங்கல் லுப்பறியப் பொன்மகமே ராகும்
உருவதீதத் தின்பெருமை யுணர்வதெளி தல்ல
பருவமணி கடலுனடை பாகமெனுஞ் செய்கை
மருமதிய மமுரிபடி வகையதுகாணுரே. (87)

படியமுரி நான்கையொரு பாண்டமதி லிட்டு
படியெனும்பூ நீரிலதைப் படியுடனே தாக்கி
வடியமறு பதுகடிகை யதுவமுரி தெளிய
மடியநில வுப்பதனை மதியிலிடு வாயே. (88)

மதியிலிடு வன்னியொரு வகையதுவின் கம்பால்
அதிதவித பெரியவனல் அமுரியது சுண்ட
விதியிதெனும் வாறுமிக விப்படிச்செய் வீரேல்
நிதியகடல் வாரியுவர் நீங்குதலையாமே. (89)

உவரதுகற் பாரைநில வுப்பதிக சுத்தி
எவருமறி யாமலுமீ ரைந்துதரந் தீட்சைக்
கவரதித கோடிகணக் கில்லைகட லுப்பிற்
சவகமனவெ ழுந்துமுயிர் தானதுவி ளம்பே. (90)

விளம்புசெய நீருவெடி யுப்புஒரு சேரு
வளம்பெறப்பூ நீருவகைக் கொருகழஞ்சு சேரு
திளம்பெறவெண் காரமது சோதுவு மாகும்
இளம்படிகஞ் சேருமிரு சாரமது சேரே. (91)

சாரமது வோடிது வகைக்குச்சும ளுருங்
கூறரிய நாலுவகை குளிக்கல்லி னிறுக்கி
ஆறரிய தாகவதி யமுரியத னுலே
வீரமதை முத்தினம்வி டாமலுட னுட்டே. (92)

விடாமலதி லிட்டுமெழு காம்பதம தாகில்
உடாமலும்வழித் துணர்வீ ருகவையது வாகப்
படாமலுடன் சேருவகைப் பாகமது நாலாய்ச்
சுடாகமெனும் பில்லையது சூட்டிடுமீ தாமே. (93)

சூடடிரவி தன்னில்மிகச் சூடுபட வாட்டிக்
காட்டிக்கன லேறித்தழற் காய்ந்ததன்பின் ஞேட்டில்
வாட்டியடி மேலுமுற வாகவும்ப தித்துக்
கூட்டியமண் சீலையது குக்குடம தாமே. (94)

குக்குடம தாகவகை கொண்டுபுட மாறி
லிக்கிரமெ னும்பில்லைபது வெவ்வே ரதாக
உக்கிரமு டன்குக்கு ட த்திலொன்றது செய்வாகிற்
தக்கியமெ டுத்ததனைச் சாற்றிடலு மென்றே. (95)

சாற்றியகு ழிக்கல்லிற் றனதனைத் தாக்கி
மாற்றிடவ ரைத்துப்பொடி மயனமதாய் ச்செய்து
பேர்த்திடும்பீங் கானிலுடன் பின்பதனை யூட்டி
பார்த்துநீ வைதனைமிகப் பக்குவமா யாக்கே (96)

பக்குவமெ னும்பனியிற் பாகமது வாக
இக்கனிய சுண்ணமிது இப்படியீ ரைந்தும்
வைக்கசெய நீருமதன் வேகமதே வேகம்
புக்கிடத்தி னந்தினம்பு கழ்ந்துசலம் வாங்கே (97)

வாங்குசெய நீருவள மாகுமொரு குப்பிப்
பாங்குபெற வேயதனைப் பக்குவம தாக்கிச்
சாங்கமது பாரைநில வுப்பதனைக் கொண்டு
தேங்குழிக கல்லிலொரு சேரதுவும் ஊட்டே. (98)

சேரதனை யூட்டிசெய நீரதுவுந் தாக்கிக்
கூரொருநா ளாட்டிடக் குறித்தமெழு காறைற்
பேரிதனைச் கொண்டுமிகப் பில்லையது வாக்கி
காரியறின் நிழலனுகா ரவிமுகத்தி லாட்டே (99)

முகவருன் பணியரவி முகத்திற்றழல் சொரியப்
புகழுங்கதிர் முசசெயம் பூட்டியெழு வாரம்
மிகசதிரோ டதனிலுற மேஷமவருங் காலம்
விகடமனு காமலும்வி திப்படியே தாக்கே. (100)

விதிப்படிமே லோடுறமென் மேலுமதை மூடி
நிதிப்படிமண் சீலையது நேர்மைமிக வாக
மதிப்படிது ருத்தியதன் வாய்ப்படிய வூதி
முதிர்ப்படிமு னைதவறி டாமுன்னை'த வாங்கே, (10)

வாங்கிடுநீ யிந்தவிதம் போல்மற்ற மருந்தைத்
தூங்கிவிடு காமலுநற் சுத்தசலப் பனியிற்
பாங்குபெறு மச்சலத்தைப் பாய்ச்சிவிடு மீங்கான்
நீங்கிவிடு காமல்நில வுப்பதின்நீ ரூட்டே. (102)

ஊட்டிவிடு நீரதனி லுப்பதனின் சுண்ணங்
காட்டிவிடு மன்பெருகல் லுப்பதின்கு ழம்பை
நாட்டிலறி யார்கள்சிவ ஞானியறின் கூர்மைப்
பாட்டிலறி யாமற்பறைப் பாரையுப்புன் னதமே. (103)

உன்னதமு றைந்துகன லோடியனற் றூவி
கன்னியபி ராமியருள் கற்பனையி னாலும்
இன்னீர்சல மாமதியி சைந்துஅரை நாட்டி
சென்னியனல் மீதிலிதைச் சிந்தித்தருள் வாயே. (104)

சிந்தையனு காதுசிவ காமியருட் பாதம்
வந்துதொழு!தேபணிய மண்டலமண் மீதிற்
கண்டுதினம் பூசிக்கனி வர்க்கமறு சுவையும்
மண்டலம்வைத் தேயுணரும் வஸ்துவிது வாமே. (105)

கல்லுப்பு.

வைத்திடுமீங் கானதனில் வானுசல நீர்மேற்
சித்திரக்கல் லுப்பதுவின் செய்கைதனைக் காண்கில்
மூத்துவின்றன் சுத்தவெளிர் வைத்துபனி நீர்மேற்
கர்த்தன்நட ன்ம்புரியுங் கல்லுபபிது வாமே. (106)

கல்லுப்பது பாரைகருக் கண்டனர்கள் வாதி
அல்லும்பக லும்ஒருவ ரறுகிலனு காமல்
நல்லசல மேற்பட்ட நன்மலர்ப்பூஞ் சூட்சங்
தொல்லைவினை யாதிதமுஞ் சூழ்வதிலை யென்றே. (I07)

சூழுமதிப் பாரையது சுத்தபனி நீர்மேல்
வாழுமொரு மண்டலம திற்படிகம் போலாம்
நீழுலகெ லாம்புகழும் நேர்மைநில வுப்பாக்
தாழுதலில் லாமற்தக டாய்விளையும் பாரே. (168)

விலையுந்தக டாதீதம வெள்ளப்பிரகம் போலாங்
கலையதீதம் பதினாறாங் காந்திமதி சூழுங்
குலையெனவுங் குப்பிதனிற் கொண்டதனைத் தாக்கி
முளையெனவுஞ் சூட்டிமிக முத்தமதில் வையே. (109)

மதிபெருகிக் கதியடைய மகிழ்விதமெய்ஞ் ஞானம்
விதியினமைப் பதுவிசித விந்துமதி சாரம்
விதியைமறைத் தேயமுதம் விளங்குஞ் சுழிமீதிற்
பதியமலர் சூடியருட் பானமது செய்யே (110)

செய்து வரமுன்செய்திடு தீவினைகள் போகும்
மெய்யது விளங்கியுன்றன் மேனியும் பொன்னாகும்
ஐயமில நடுக்காண்ட மதினூறு திபாரு
கைபாகமுங் குருமுடித்த கடைக்காண் டமிதாமே. (111)

கடைக் காண்டமும் நூற்றினிலே கருவிபாங் தோணுஞ்
சடைக் காமலெ நூலதனை தான்வைத்துநீ பார்த்தால்
மடைதிறந்த வெள்ளமது வந்ததுபோல் யோகந்
தடையிலா தேயாகுமது தன்மையிது முற்றே (112)

நடுக்காண்டம்

முற்றுப்பெற்றது.

உ

பரமபதிதுணை.

புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

கற்பம் 300.

கடைக்காண்டம் 100

முத்திதரும் ஞானவழி மூலச்சுழி மீதிற்
சத்தியபி ராமியுயர் சதுர்க்கமல பீடஞ்
சித்தியருள் பெற்றிடுக்ற் சித்திரமணி வாயல்
நித்தமலர் பொழியிரவி நிர்மலமுங் காப்பாம். (1)

நிருமலநி ரந்தரநி ராதரம ரூபி
கருமவினை யுற்பவித்த காமிதவி ரோதி
வருமவுவ ரதுகடலில் வாருதியி னூம்
மருமமதி சூழுமணி மகுடமலர் காப்பாம். (2)

வேறுசந்தம்

கருவிகள் தொண்ணூற்றாறும்நிர் மலமாய்க்
கனலெனு மதியுணர்ந் ததனுற்
காயம்வெவ் வேறாய்ச் சனனமுண் டாதற்
கனகரத் தினவொளி யறிய
மருவிமும் மலமுங் கருகிநீ ருகி
மதுரசஞ் சீவியென் னமுதம்
மதிநில வொளிவாய்ச் சுழிமுனை யிடபின்
வலமிடங் கதிர்மதி சூழும்
வருதம வாரி பொழியமும் மலமும்
மாய்கையு மகிழ்ந்துசஞ் சலம்போய்
மதியெனும் ரவியை மனம்புணர்ந் துணர
வாலையி னடிபணிந் தருள
குருமுனி மதுர வாக்கியத் துணர
குண்டலி வளர்மலர்க் கமலக்
கும்பமென் றிலகும காரகா ரணத்தாற்
றுஞ்சர முகவனைத் துதிப்பாம். (3)

குஞ்சரத் ததிக மதுரத்தே னின்பக்
குண்டலி வல்லமை யுடைய
குகைவள ரரிய பிராணவாய் வதுவுங்
குடியிருந் திலகுமா நகரில்
நஞ்சரத் தமுத பஞ்சபூ தியமும்
நடனவுல் லாசமே புரியும்
நாதவிந் துதித்த கருநெல்லி வளமும்
நன்மதி சாரைவெண் சூழுங்
கஞ்சமா மலராங் கருதிய நலமாங்
கதியுறு யோகமென் மேலாங்
கருணைமெய்ஞ் ஞானம் விதிப்பதா லினிய
கனியெனு மமுதெனுங் கருத
விஞ்சையின் பெருமை விதிப்பதால் முன்னோர்
விட்டடில் தொட்டதோர் தசையால்
விளங்கிய வன்னி ரவியொளி மேவு
மிகமூலப் புளியிருந் திடமே. (4)

மிகமூலப் புளியு மமுரியு மியல்பாய்
மென்மேலு மதீதமா யமுந்தி
விளங்கிடுஞ் சாரை யரவத்தால் மடங்கி
மிகவஞ்சு தலைநாகப் பாம்பை
உகமையாய்ப் புணரக் கரேசுண் ணமதாய்
உகாரமென் றதுபுளி யுணர்வாய்
ஓராண்டுபின் வாங்கி ரவிதனி லுலர்த்தி
ஓரிடி யாயிடித் ததனைச்
செகத்தில்வாழ் மனிதர் எவர்களு மறியாச்
சீலையில் வடித்துச்சூ ரனமாய்ச்
சிறியதோர் கலசம் அதனில்வைத் தினிக்கேள்
தேவியம் பிகைபதம் போற்றி
அகத்திய ரருளா லடிபணிந் தேற்றி
அக்கார வமுரிகொண் டிட்டவும்
அருணவுச் சமதி லறுவகை நீராம்
அகரம்விட் டுகரத்தை யுணரே. (5)

அகாரமா மாதி யந்தத்தி லுகாரம்
அன்புட னதையுர மாக்கி
ஆண்டொன் று இந்தப் படிபிச காமல்
அடிவிட்ட தகன் றுசெல் லாமல்
உகாரங்கொண் டேயம் மூலததின் வாசி
உங்கென் று தாரைகொண் டேது
ஒருகடி கையினில் நவத்துவார வாசல்
ஓடிடா வாசியா லழுத்து
பகரும்வன் காலே மாலேயு மிரண்டு
பழக்கம தாயப்பி யாசம்
பதறிடா மனுமே கண்டதா ரணேயிற்
பாகமா யூதிடும் வாசி
விகற்பமி லேழா யிரத்திரு நூறு
விளங்குமூ லத்தினி லிசைந்து
வேறதாய்ப் பிரிந்த சுவாசமொன் ருகி
மிருவளர் பிறையெனும் வகுப்பே (6)
முதலாவ தாண்டு
வளர் பிறை யிருபத் தொராயிரத் தறுநூர்
வாசியு மூலத்தி லிருந்து
வாழ்விக்கு மாதக் தசதிங்க ளாண்டு
மருவிய அமுரிகொண் டிடவே
இளவுரு வாக விரண்டுதிங் களினில்
இலக்க வாஞ்சையையுமே வெறுத்து
எழுபத்தீ ராயிர நரம்புகள் வலுவாய்
எட்டுச்சா னுடலெங்குங் கனலாய்
மருவிய வாசம் பிராணன்மேல் நோக்கும்
வாசியுங் கால்கொண்டு பரவும்
மதிரவி யிரண்டும் பிரகாசம் புரியும்
மனமொரு தலேயாமோ ராண்டு
கருவுரு ளதனு லீராண்டு சென் று
கனகமா குந்தேகஞ் செழுமை
காரசா ரத்தைப் புவிதனில் மாந்தர்
கலைக்குத வாதெனப் பழிப்பார் (7)

இரண்டாவதாண்டு

பழக்கம தாக வாசிமூ லத்திற்
படிந்துமே ஞாதவிந் ததனிற்
பரிபதாய்ச் சொரூப மாய்த்திரண் டதுவாய்ப்
பரப்ர்ம்ம ஒளிவதாய்ச் சைல
அழகென்ன சிசுவாய்ப் பாலன்போ லுருவாய்
அசுரவு காரத்தி னருளால்
அக்கினிச் சுவாலை யனலினு லெடுத்த
அசடிலாக் காடமென் றதுவாய்
உழவுவெள் ளாமை பயிரிடும் விளைவாய்
ஊமையாம் போலுரு வாகி
உகரத்தா லமுரி வலுத்துக்கண் டதுவாய்
உயிருட லொன்றதாய்ப் பொருந்திச்
செழுமையாய் ரோகம் அருணநுட் பமதாய்
தேவியம் பிகையெனும் வசியந்
திரேகமா றிதமும் ரவியொளி பகலாய்த்
தெளிவதா மிருளும்போ மதியே. 8

மூன்றாவதாண்டு.

இருளது மாறி மதியொளி வாகும்
இராவினிற் பளிங்கது போலாம்
இரண்டெ ணண்டு சென்றபின் மூன்றில்
இனியென்ன இருதய மறியப்
பருவமா மமுரி கிறமது செழுமைப்
பருதியா முதற்பட்சங் காலை
பாகம தாக அடிக்கடி அருவி
பழமைமுன் வருவதும் வாரா
முருவதாய் மூன்று வேளைதான் வருமும்
மூலத்தின் புளியைச்சூ ரணமாய்
முக்கியப் பீங்கான் தனிலிட்டு அமுரி
மூன்றுசா மஞ்சென்ற பின்பு
உருவெனு மிரதந் தன்னிலிட் டிறவாய்
உண்டையுஞ் செய்துணர்ந் துடனே
உளவறிந் துண்டு பிராணவா சியைத்தான்
ஓமென்று கும்பித்து ஊதே. 9

ஊதிடுந் தாரை யுறக்கங்கொள் ளுந்தனும்
உரத்தகூக் குரலது மாகஃ
உறுதியாய்க் கண்டந் தனிலுறும் வாசி
ஓசையை யெவர்களு மறியார்
ஆதியுமந்த நாதவிந் ததுவே
அண்டபிண் டங்களு மதுவே
அப்புவுப் பதுவே கருநெல்லி சாரை
அகாரவு காரமு மதுவே
கோதிலாக் கார சாரமு மதுவே
கோசமும் பீசமு மதுவே
குறுமுனி யருளாற் புலத்தியன் விளங்குங்
குவட்டினிற் சித்தர்கள் பணிய
வாதிக ளறிய வைத்யர்க ளறிய
வளர்யோக ஞானிக ளறிய
வகைமிகு மிந்த கற்பசூத் திரத்தை
வைத்துப்பூ சித்துப்பார் தனிலே 10

பாரினில் மூலப் புளிச்சுண்ண முறைக்கப்
பதினெண்பேர் சித்தர்கள் மகிழப்
பணிந்துயான் துதிக்க உலகினிற் சரக்கைப்
பக்குவ மாக்கவி னிக்கேள்
ஆரிமி குத்த கருநெல்லிக் கனிதான்
அரிவிந்து என்னுமுப் பதனால்
அதுஒரு மணங்கு எவருமறிந்திடா
தடக்கமாய்க் கொண்டொரு பாண்டம்
நேரதிலடக்கி நதிசலம் வாங்கி
நேர்மையா யிருமணங் கெடைதான்
நிரைத்துச்சா லதனில் இருவித பாகம்
நிர்மல மியல்புடன் புகட்டி
வேருற வில்லா தறுபது நாழிகை
மிகவுஞ்சேர்த் ததுநன்று யூறி
விரைவுறப் பிசைந்து பின்பறு பதுவும்
மேவிச்சென் [illegible]னர் விளக்கே. 11

விளக்கமாய்ப் பிசைந்த பின்புமூன் றுநாள்
மிகத்தெளிந் ததுசுத்த சலமாய்
விதரணை யாக மண்ணினிற் றெளிந்து
மேன்மையா மந்நீரை வாங்க
அளம்பெறுஞ் சுக்கான் பாறையஞ் சோட்டை
அதற்குத்தென் பாரிசம் விளைவு
அறிகுவாய் மூன்று காதத்திற் கப்பால்
அருவிபா யும்*குறுங் குடியாம்
வளநிலஞ் சூழ்ந்து மறவர்கள் நாளும்
வாழ்புவி யதற்குத்தென் திசையில்
மகிழுறும் பூமி மலைவன மடர்ந்து
மல்லல்தா னியங்களும் நிறைந்து
விளைகுன் றின் சாரல் அதனடி வாரம்
வெட்டுவர் சுண்ணும்பு பாலாம்
வெண்பளிங் கதுவாம் புட்பரா கத்தின்
விளங்குசந் திரனொளி வாமே. 12

ஒளிமிகு மதியாம் பிரகாச மிலகும்
ஒருமணங் கதுசுண்ண நீரை
உள்ளம கிழ்தலோ டுலகோர்க ளறியஉ
உரியபாண் டத்தினில் நன்கு
தெளிவுடன் வடித்துச் சீக்கிர மிறக்கிச்
செழும்வன்னி மூட்டிய டுப்பிற்
நீர்க்கமா மனல்கொண் டக்கினி வீசக்
திறமாய்வைத் தெரித்திடும் போது
அழகிய வாலை கௌரிப்பெண் ணுளை
அகத்திலெண் ணித்தியா னித்து
அவள்பதம் போற்றி அன்புறப் பணிந்து
அதற்குமேற் பாண்டத்தை நோக்க
வழியுமே நுரைதான் வரும்பதம் வாங்கி
வரவரப் பின்புமா றுமல்
மதிசலஞ் சுண்ட எண்ணெய்வற் றிலகும்
மா†வக டுவர்க்கச செடுத்தே. 13

*குறுங்குடி—திருக்குறுங்குடி. †அகடு—பொல்லாங்கு

எடுத்தெடுத் துணர்வாய் இனிப்பத மாகில்
இலகிய நாதமென் றிரதம்
இசைந்தகுங் குமம்போல் நிறமது ஒளியாய்
இருப்பதி னியல்புகண் டினிப்பின்
அடுத்துட னிறக்கி ஆறவைத் தினிதாய்
அதனைப்பார்த் திடுமள வினிலே
அழகிய நிறமால் திருவெனு மொளிவாய்
அரிதளம் போலுமே பரிதான்
கடுத்திடி லிதுவும் அதிதமாய்ப் புளியிற்
கடுஞ்சுண்ண மெனுங்கரு விதுவாங்
கரையிலாத் தொந்த மீரஞ்சு தரத்திற்
சற்சுண்ணம் படியது மொன்று
தடுத்திடா மலுமே சலம்படி நாலு
தண்ணீர்தெ ளிந்ததை வாங்கிச்
சலத்தெளி வதனிற் புளிச்சுண்ணங் கரைத்துத்
தனியெடுத் ததனைவைத் திடுமே. 14

எடுத்திடக் கசிவு மெண்ணெயு மதிதம்
இலக்கிலப் புளியதின் சுண்ணம்
இப்படிச் சவுத்து இனியகற் பனையாய்
இயம்பிடு வெண்மதி வெளிறாய்
அடுத்துற வாக அதிதச்சுண் ணத்தை
அற்புத மாகவு ரைப்பேன்
அருட்படி காரம் வெண்காரஞ் சாரம்
அதிதமாம் வெடியுப்புப் பாரை
தொடுத்துடன் வகைக்குச் சமனஞ்சு பலந்தான்
சுகாதித மாகவு மெடுத்து
சகிர்தகற் பாண்ட மதனிலிட் டிதனைச்
சுயம்பெறு புளிச்சுண்ண வகைக்குக்
கொடுத்திரு பத்து அஞ்சுமே உறவாய்க்
கூறிய ஐம்பது பலத்தைக்
குறித்தொரு பெரிய பாண்டமிட் டதனிற்
குருவெனு மமுரிவிட் டிறவே. 15

அமுரியீ ராறு படியள விட்டு
அறுபடி கற்சுண்ண மதனில்
அளந்துநீர் தாக்கிக் கரைந்தற வுணர்ந்து
அருட்பெற மூன்றுநா ளதன்பின்
அமுதவம் பிகையின் பதமலர் போற்றி
ஆதித்தன் காற்றுப்ப டாமல்
அதிரக சியமாய் அடக்கம்வை யில்லம்
அறிசதுர் நாட்கழிந் தந்நாள்
சமுசய மில்லாப் பாண்டத்தின் நடுவில்
தமரொன்று தவறாய்ப் போட்டுச்
சங்கைகொள் ளாமற் பெருத்தபாண் டத்தின்
சமதை இறங்கவிட் டிசைவாய்க்
குமுறிடா மலுமே தெளிவுநீர் வாங்கிக்
குறைவிலா தடுப்பில்வைத் தெரியக்
கொடூரமின் றினிதாய் ஒருமரக் கொப்பாய்க்
கொண்டுடன் கமலம்போற் றீயே. 16

காமக்க மலத்தீ எரியும்போ துறையுங்
கடல்நுரை யுறவது போலுங்
கசரதை யெடுக்க நீர்கள்சுண் டிடுமாங்
கல்மஷம் யாவுங்க ழன்று
சோமனென் றொளியாய்ச் சுகாகித வெளிறாய்
சுயம்பிர மாகச்சு வறுதற்
சூட்சமிப் பாகம் வருதற்பின் பாகஞ்
சுவறிடு மிரதம்போற் றைலம்
வாமப்பா லமிர்த மதுவெனும் பானம்
வளப்பமா மியல்புவாஞ் சனைபோய்
வஸ்துவாம் நாதம் வருதலைக் கண்டு
வண்மையா மமளிகொப் பளிக்குங்
காமப்பா லுணர்ந்த கசடருக் கின்றால்
கருதிடிற் கழுதையாய்ச் சனனங்
கருவினி லுதிப்பர் வினையுய்வந் தெய்துங்
காட்டொணா திதுகற்ப நூலே. 17

கற்பம்பின் நாறுள் வழலையின் பெருமை
காட்டொணு ரகசிய ஞானக்
கருவெனும் பாண்ட மிறக்கிவைத் தாற்று
கனலெனுஞ் சுடரது தணிந்தாற்
பற்பம தாகு ரவியினி லுலரப்
பாகமாய் வைத்தெடு வாரம்
பளிங்கதின் நிறமாய் அதீதச்சுண் ணமதாய்ப்
பாய்ச்சிடுங் குப்பியி லடக்கி
மற்பெட்ட கத்தில் வைத்திடு வாடை
வாசமும் வெளியில்லா ரகமல்
மதியெனும் விந்து சந்த்ரபுஷ் கரணி
வாருதி அப்புவென் னதீதத்
தற்பர மெனும்பேர் அண்டமு மிதுவே
சதாசிவன் கங்கையு மிதுவே
சாரமா யிலகுஞ் சோதிப்ர காசச்
சராசர மதில்நிறை யொளியே. 18

உப்பின் பெயர்.

நிறைந்ததற் சொரூப ரோமநீ ரூசி
நிராமய நிலவுப்பென் றிதுபேர்
நிராதார மெனுமுப் பமுரிபஞ் சாட்சரம்
நிகரிலா உப்பினை யுரைக்க
விரைந்தமா வென னூட கடுவனை மெனுமாய்
விளங்கிய அவ்வெனு மெழுத்தாம்
மேதினி தனிலே சிறுவர்க ளமுரி
விரும்பிடு மூன்றுபத் திரண்டாய்ச்
சிறந்திட்ட செய்தி தனையுணர்ந் தினிதாயச்
செப்பிய பாண்டத்தில் நல்ல
தெளிவுவிட் டதனிற் கற்சுண்ண நீறு
திருத்தமாய்ப் படிபதி னாறு
வரந்தரும் வாலை மலர்த்திருப் பதத்தை
மருவியா சாதனை செய்து
வளாமு ரியிற்றுச் சிமனது சலியா
மதுதனைக் கரைத்துவைத் திடவே. 19

மதுதெளிந் துவர்போய் மதுரசஞ் சிவியாய்
மகிழமு ரியின்கச டகன்று
வாருதி யுவர்போய்ச் சுத்தகங்கையதாய்
வஸ்துவென் றதுமிக வொளிவாய்
இதுசதுர் நாளில் இணையிலா மனுமே
எடுக்கவு மிதற்கடி நடுநேர்
இசையுமோர் பாண்ட மதனில்வைத் திருக்க
இனியநீ ருருவிபோற் சலமாம்
அதின்மையத் துவாரம் பக்குவஞ் செய்வாய்
அண்டமென் றதுதிரு மாலாய்
அமுதமாய்ப் பலனி நிடமாய்த் தெளிந்து
ஆறதாய்ப் பெருகியவ் வழியிற்
சுதனரு ளிலகு முத்ததிற் கதிகந்
துய்யவெண் மதிநில வாகிச்
சுயம்பிர காச மெனுங்கார சாரஞ்
சுகாதிதப் பேரின்ப மெனவே. 20

வழலையுப்பு.

எனுமது சுவைநீ ரிருவகைச் செயநீர்
இலகிய திராவகச் செயநீர்
எடுத்தக மதனி லிகலதா யுணர்ந்து
இடும்வன்னி கமலம்போ லிசைந்து
கனம்பொருந் தியநீர் கனலெனுமதுவாய்க்
கசடகன் றதன்றுரை விளங்கக்
கருதிடு மதசூழ் கண்டுபோம் பொழுது
கண்ணுடி விளங்குபொன் னுருவாய்
இனமது பாகஞ் சுவறிடு மினங்கண்
டிறக்கிவைத் தாறச்செய் திடுபின்
எடைதயி ரதுபோல் இளகியுப் பதுவாய்
ஏகா க்ஷரமெனும் பொருளாய்த்
தனமறிந் துரை வழலையுப் பிதுவாந்
தணலது ஆறிச்சாந் தமதாய்ச்
சாரவிந் திரிய ஐந்துஅட் சரமாய்ச்
சாற்றிய வாறுகண் டிடுமே. 32

சாரமென் றிதனைக் குப்பியி லடக்கிச்
சங்கையில் லாமலி ரவியிற்
றரணிமா னிடர்கள் அனுசரி யாமற்
றன்னைத வாரஞ்சென் றெடுத்துக்
காரமாஞ் சாரம் நாதவிந் தெனுமாய்க்
கல்லுப்பெ னுங்கருத் ததனைக்
கதிர்மதி சுடர்தான் வழலைமுப் பூவுபேர்
காட்டொணு ரகசிய மிதுகாண்
வேறொன்று மிலைபார் அடிநடு முடியும்
விளக்கினேம் அகத்திய ரருளால்
மேதினி வாழும் வாதிகட் கிதன்பேர்
வேறதாய் விதித்தனர் விழலாய்ப்
பாறையுப் பறிந்து பாகங்கண் டறிவோர்
பருதியென் றதன்மதி யறிவார்
பலபல நூல்க ளிதற்கொவ்வாச் சூக்ஷம்
பரமதை யறிந்தறி யாரே. 22

பொய்ம்மை வாதிகள்

அறிந்தறி யாம லம்புவி மனிதர்
அனந்தசாஸ் திரங்களா ராய்ந்து
அகப்படா துருவின் கருவறி யாமல்
அண்டக டாகமுந் திரிந்து
பறிமய வாசை பிடித்துப்பேய்ப் பித்தர்
பாரிலுள் ளோர்களை மயக்கிப்
பலபல சரக்கைக் கருக்கிச்சுட் டதன்பின்
பணங்களைப் பறித்திந்தப் பாரில்
வெறிபிடித் தவர்போல் வேடமுற் றுலவி
வேசியர் மயல்மிக விரும்பி
விரகம தாகிக் கள்ளுடன் கஞ்சா
விதமுண்டு *வாமங்கொண் டலைந்து
நெறித்தவம் மறந்து வாய்மதம் பொழிந்து
நிலையறி யாமல்ஞா னத்தை
நிகழ்த்தியே நாய்போற் குலைத்துமே திரிந்து
நிதமுமவாய் புலம்பியே வாழ்வார். 23

*வாமம்—தீமை, விரோதம்.

வழியொன்று மிலைபார் வழலைமுப் பதிதம்
மருவிய முப்பத்து மூன்றும்
மறப்பிலா மனுமே ஞானமுள் ளவர்க்கு
மதிரவி சுடாதாம் வஸ்து
தெளிதேனுக் கதிகம் அமுரியி னுப்பு
திருத்தமாய்ப் பலமொரு எடைதான்
செய்கைவா சனையாற் புளியெனும் லவணஞ்
செழுஞ்சுட ருப்பதாம் பாரை
உளிக்கடன் கர்து கல்லுப்பு லவணம்
ஒருபல வகைக்குமே சமனும்
உருவிது ப்ரம்மன் விஷ்ணுருத் திரனை
ஒன்றதாய்க் குழிக்கல்லி லடக்கி
விழிமட மாது வழலையைத் துதித்து
வெடியுப்புச் செயநீர்விட் டதனை
விடாமனு மொருநா ளிடைவிடா மனுமே
விகற்பம்வா ராமலாட் டிடவே. 24

விகற்பம்வா ராம லிடைவிடா ததனை
மிகவென மயனம தாக்கி
மெழுகெனும் வருத னுவமைய தாக
மென்மேல தாயாட்டி வழித்து
புகலிலா வட்டம் மெழுகதை எடுத்துப்
புனிதமாய் ரவிமுகந் தாக்கிப்
புனல்சொரிக் கிடவுங் கனல்படத் தணியிற்
புகழவே வைத்தொரு வாரம்
அகமகிழ்ந் தினிதாய் அகத்திய ரருட்டண்
ணறியபொற் பாதகன் மலரை
அர்ச்சித்துப் போற்றி அகமதி லடக்கி
அவ்வக லகலது மூடி
இகபர கதியி லுலகெலாந் துதிக்க
இதற்குமண் சீலைபு மேழு
இசைக்துசக் திகழா திரவியி லுணர்ந்து
எடுத்துருக் குடக்கினி லியம்பே. 25

சுண்ணச்செயநீர்.

இயல்புடம் புகட்டி எடுத்ததை யாற்றி
இதற்குள சுண்ணம்பார்த் திடினும்
எளிதல்ல மூப்பு உலகத்தோ ரறிய
இறப்பிறப் பதுயிரிற் றிடினுஞ்
சயலது அறியத் தந்தையின் விதியாற்
றவப்பய னறிவதுங் கடினஞ்
சாத்திர மாறும் வேதநூல் மறையுந்
தத்துவ மாய்ந்தது கடினங்
குயில்மட மாது கொங்கைமின் னுளர்
சொஞ்சுமற் றஞ்சினும் வாலைக்
கோதையம் பிகைப்பெண் ணமிர்தபொற் கமலங்
குறித்துடன் தொழுது அர்ச் சனைசெய்
மயில்மலர் சூழும் மரகதப் பச்சை
வழலையென் றிதைச்சுண்ண மெடுத்து
மதிமலர் சூடி வனுத்திடுங் குப்பி
வசமதுள் ளடக்கிவை பதனம். 26

பதனமென் றதனிற் பலமொரு எடைகாண்
பாய்ச்சிடுங் குழிக்கல்விற் பதமாய்
பரங்கிவைப் பதுநவாச்சார மோடு
பச்சைக்கற் பூரமவ் வெடைதான்
மதனசவ் வாது கஸ்தூரி புனுகும்
மயில்நிற மதுவண்டு பசுமை
வராகனென் றதுவே வகைவகை சமமாம்
வழலைமுப் பமுரியின் சாரஞ்
சுதனரு ளாவின் கோரோ சனையுஞ்
சூட்டிடு மயனம தாக்கிக்
சுயவசீ கரமாந் தூயவெண் பீங்கான்
தொடுத்ததிற் பனியில்வைத் தினிப்பார்
உதகமென் றிரதஞ் சயிலத்ரா வகமாம்
உன்னதச் செயநீர்சுத் தமிர்தம்
ஓரிரு மூன்று நாளதில் பதிநீர்
உவகையாய்க் குப்பியி லுணர்ந்தே, 27

உணர்ந்து உன்னிதமாஞ் சலமெலா மெடுத்து
ஒன்றுமில் லாமறு மூவமை
உருவறிந் துகித மறுவித மறிய
உடனொரு பாத்திர மதனிற்
றணல்சொரிந் திடச்சவ் வீரம்நாற் கழஞ்சு
தனைப்பொடித் தங்கமைய தாக்கித்
தனிரவி வாலைத் தம்பன மதுவே
தவப்பய னுறக்கன கதிரிற்
குணவிக சிதமாய்ப் பாவனைப் பதமாய்க்
குறித்திடில் முருக்கம்பூ வதுபோற்
குறுமுனி யருளாற் ஒருதின மதனிற்
கொடியசுண் ணமதாய்வி ளங்கும்
இணையிலா வதித வழலையி தாகும்
எட்டெட்டு பருவத்தி னாலும்
இலகிமேய பொருமல்குளிகைசா ரணைக்கு
இனிப்பளிங் கதன்றிறம் வெளியே. 23

வெளுத்துநீ ரூறும் பதமறிந் தியல்பாய்
வெண்மதிக் குப்பியி லூற்றி
வெருபத னமதாய் அடக்கம்வைத் துடனே
வேதாந்தி யாய்ப்புவி தன்னிற்
பழுத்தவஞ் செழுத்தாய் அமரியி லுணர்ந்த
பழம்புளி மூலமென் றெழுத்தாற்
பராபர பரையா மிருவகை யதனிற்
பாய்ச்சிடு வழலையுங் கடுகும்
எழுந்ததற் கியங்கி யின்பமாஞ் சனிகொண்
டினியுடல் வலுத்துவச் சிரமாய்
இருவகை யெழுத்தா லியங்குக லதிதம்
இவனுரைத் திடுவிளங் கரிய
தளதளத் தசையு மீரைந்து வாய்வு
தன்னைத்தா னொருவழி தனித்தற்
சதுர்மறை வேதச் சுயம்பிர காசச்
சைதன்ய தேகமீ தாமே. 29

நாலாவதாண்டு.

தேகமென் சானுந் தீவிர மாகி
செழுங்கனல் கதிர்மதி சூழ்ந்து
தேகம தீத முயிருடல் வளுத்துச்
சிவகங்கை நதியென வியன்று
ஏகமா மமுரி யானமூன் றதுபின்
இருவிதக் காரமுஞ் சாரம்
இரதமா மாறு கரைபுரண் டோடி
இடவல சக்த்ராசூ ரியனும்
புகழ்சது ராண்டு முதற்படி கடந்து
பூரண ரவிமதி சேர்ந்து
பூதாதி ஐந்து ப்ருதிவியின் மூலம்
புகழ்ப்ராண வாயுவி ருந்து
முகனைய தாகி அகண்டதா ரையிலும்
முனைச்சுழி இடைபின்னு மறவா
முச்சந்தி வீடு மதிரவி பீடம்
முன்னுல வியதாரை யூதே. 30

யோகதாரணை.

ஊதிடுந் தாரை யகண்டதோர் வாசி
உலவிய உள்வழி நேச
உரியமித் திரைபோஞ் சோம்பல்வீம் பதும்போம்
உடற்கரு விகளெலா மொடுங்குந்
தீதிலா வொளியாம் அகாரகா ரணதநிற்
றினந்தினங் காலையு மாலை
திருத்தமா யூதி ஓங்காரந் தன்னிற்
றியானமுற் றிருநாழிப் போது
ஊதிடு வாய்சீ அகாரகா ரணத்தில்
உகாரமாங் கற்பத்தை மறவா
துவ்வெனும் அவ்வி லுயிரெழுத் தாட்டம்
உடலுயி லொன்றதாய்ப் போச்சு
சோதிய முரியுஞ் சுழிமூலப் புளியுஞ்
சுகாதீதகற்பத்தி லிருந்து
தூக்கிடும் வாசி நாசியி லனுகா
சொக்கிடா மற்கண்டத் தூதே. 31

கண்டகா ரையினி லூதிடும் வாசி
கபாலத்தின் வழியதாய்ச் சென்று
கருவல மாகச் சூழ்ந்துபின் னிடமாய்க்
கருதிவைத் துடனொரு கடிகை
அண்டத்தை வலமாய் ஆரா தனைசெய்
தாக்ஞையி னிடகலை யறிந்து
அசைவுமென் மேலா யடிபணிந் தருளி
அங்கொரு கடிகைதான் செபிக்க
மண்டல முழுது மொளியின்றன் விசிதம்
மணிவிளக் கதிகசோ தியினில்
மதியிருந் தோர்மை கடவுளி னருமை
வாசியின் றூடிய நேசஞ்
சண்டனு மணுகான் றுயரென்ப தேது
சாத்யம சாத்யமு மேது
சதாசிவப் பகவான் நடனஞ்செய் திருப்பார்
சாயுச்ய பதவியு மாமே. 32

பதவியும் நாலு கடந்தவ கத்தியர்
பாதபொற் கமலபங் கயத்தைப்
பணிந்திரு பாத மலர்மணி வாசற்
பற்பம்நீ ராடிய நதியில்
முதலிரு மூன்று நான்குதிட் சையுமாய்
முத்தியுஞ் சித்திபெற் றியன்று
மும்மூலச் சுழியின் முனையிலநின் றூடி
முப்பாழுக் கப்புறந் தாண்டி
விதமஞ்சு காய கற்பமஞ் சாண்டு
விடுமுப்பு வழலையுப் பனுகு
விளங்குவ தெதற்கு கருத்தொட்டு விரும்பு
விசிதமா யறுசுவை யற்ற
மதனமா மௌன வஸ்துபே ரின்ப
மதிவிளங் கியரவி ரண்டு
மாறிமா றிடவும் வயதறு நூறு
மாற்றுமஞ் சாவதஞ் சாண்டே. 33

வேறு.

ஆண்டு மூன்ூறு நாட்கழிந் திடிலாம்
வேண்டு ஞான விதித்தகற் பத்தினால்
மூன்று மாறமுப் பாழுநீ ருகிடும்
ஞான்று மாள்வது நானிலத் தில்லையே. 34

இல்லை வையத்தி னுசையில் லார்களுக்
கில்லை யெய்வதென் னோதுந்தன பிலலைபார்
தூய்ய வெண்மதி சோமநீர் சூட்சமே
அய்ய மேது அஞ்சாச்சுது மாற்றுமே. 35

மாத்துலைக் தெனிலும் மறுப்படாத் தேகம்
வாசியும் வசமதாய் வழங்கும்
வளர்பிறை மதியால் மௌனம்வந் தெய்தும்
வாருதி யுவரது விலகுஞ்
சாத்திய கற்பப் பாக்கள்மூன் றூறின்
சங்கையை யாய்ந்திடும் புனிதர்
தனக்குள்வி ளங்குஞ் சைதன்யக் கருவைத்
தரணிமா னிடர்களி லொருவன்
பத்திர வானுய்ப் பனிரண்டாண் டடுத்துப்
பலபல நூல்களும் படித்துப்
பருகியென் றறிந்து மதியுற வாகிப்
பானமே கதியெனப் பணிந்து
காத்துசற் குருவின் அனுகரகம் பெற்றுக்
கதிரவ னுனுமதி யௌவாங்
கற்பசா தனையிற் காயமும் வலுத்துக்
கடவுளின் சித்தமு மாவார். 36

சித்தராய்ச் செனன மெடுததுமெய்ஞ் ஞானஞ்
செகத்தினி லுதிரமாங் கருவிற்
தெளிந்தன்னை கர்ப்பக் குழிதனில் விந்து
செனிக்கச்செய் விதமன்னுட் பருவம்
வித்துப்பாய்ந் துதித்து நாதஞ்சேர்ந் துணர்ந்த
வேதமாம் யோகதீட் சையினால்
விந்துநா தமுஞ்சே ரம்சத்தி னளவால்
விவேகம்வந் திடுமென வறியார்

சுத்ததி தமதி ரவிதனை யுணர்ந்த
    துராதுரக் குழியதிற் பொருத்தஞ்
சூட்சமா ரறிவ தரிதரி தமுரி
    சுயசுத்த ஞானபே ரின்ப
முத்தமி ழுணர்ந்த அகத்திய முனிவர்
    முறைதவ ராமனு முலகில்
மொழியவா ருதியின் கடலுவர் நீங்கி
    முத்தியுஞ் சித்திபெற் றனரே. 37

பெற்றபே ரதீத கற்பசா தனையைப்
    பேசுவ தெளிதலப் பேசார்
பேரின்பக் கடலின் மூழ்கியக் கரையிற்
    பெரும்பதி யடைந்தபண் பேர்கள்
சித்தர்க ளுயர்ந்த மதிவளர் பாணம்
    சிரஞ்சீவி பதவியிற் றெளிய
தேகசித் தியுமஞ் சாண்டுஉற் பவமே
    செயம்பெறக் கற்பமுண் டுறவாய்
நித்தமுங் காலை மதியில்முப் பதிதம்
    நிகழ்ந்திடுங் கடுகள வெனினும்
நீங்கிடா மனுமெ நெறியினின் றுயர்ந்து
    நெஞ்சக மெனுமிடை கற்கொண்
டுற்றிடும வாசி பிங்கலை சுருதி
    உயர்ந்தில கியசுழி மூல
உவமைகண் டிதிப்பி ராணவாய் வதனை
    உம்மென்று நோக்கநற் சுகமே. 38

வேறு.

மேலா தாரமி ருப்பிடம் வாசிதான்
தூல மாவலிற் சூட்சமி ருப்பிடம்
ஆல காலவ மிர்தசஞ் சீவியாங்
கோல மிவ்வாறு குறிப்பறிந் தூதுமே. 39

ஊதுந் தாரையோ ரஞ்சதா மாண்டினில்
நாத விந்து நடத்தையிவ் வாறினல்
வேத சாரம்வெண் சாரைப்பி ரபல்யும்
வாத வித்தை வசியம தாகுமே. 40

வசிய வாவென வங்சிங்கென் றேபின்பு
விசய ராஜபோ கஞ்செய்வி திப்படி
திசையெ னுங்கலை வாயுவொன் றுகிடில்
தசையெ னும்உரு வந்தானொன் றுகுமே. 41

ஒன்றேழு ஓர்பத்தி ராயிரம் நாடியில்
என்றேயி ருபத்தோ ராயிரத் தறுநூறு
நின்றேயு தித்திடும் நீடுங்க லையெனும்
கன்றேயொ ருமித்து நாடிடு மாவதே. 42

நாடியோ மென்றொரு நற்கடி கைப்பதம்
ஓடிய தோர்நவ த்வாரமோ டாமனும்
மேடிய வாசியி ழுத்துமேல் நோக்கிட
ஆடிய வண்டரண் டங்களு லாவுமே. 43

அண்டம் புக்கும் அழுத்தினால் வாசியை
தெண்டி ரைக்கடற் றிசையெட் டுலகெலாஞ்
சென்று மேவித் திருநட னம்புரிந்
தென்று மின்று மிவர்க்கொரு நாழியே. 44

ஆறுவதாண்டு.

நாத விந்து நளினமா றுண்டுபார்
சூத வித்தைச் சுகசூக்ஷ்ம தேகமாம்
பூத மைந்து புகழ்ந்திருந் தேயிடஞ்
சாத னஞ்செய் தன்னையறி யார்களே. 45

விந்து இத்த விதமறி யாமனும்
மைந்த ரான வகைதெளி யாமனும்
கந்தை சுற்றிய காமக் குழியினில்
இந்தி ரியம்விட் டெங்கும டிந்தாரே. 46

மடிந்தி டாமனு மாய்கைய கற்றிடா
அடந்து முப்பா ழதுகடந் தேறிடா
உடந்து யோனியுல் லாசம றந்திடா
நடந்து வாசிக திகண்டு லவுவரே. 47

உவ்வும் அவ்வும் உடலுயிர ட்சரம்
மவ்வும் நவ்வும் மதிரவி யாகிடிற்
சிவ்வும் வவ்வுஞ் செழுங்கனல் வாயுதான்
யவ்வு மொவ்வு மகாரத்தி லஞ்சதே. 48

அஞ்சு கூடி யமைத்தபிர பல்யப்
பஞ்ச பூதம் படைத்த பலனறி
நெஞ்ச றிந்து நிலைநின்ற வாசியை
அஞ்சு மூன்றி லடக்கவல் லார்களே. 49

அஞ்சு மூன்றும் அகாரஉ காரமாய்ப்
பஞ்ச தாதுப டைத்த பரமதாம்
நெஞ்சில் நின்று நினைத்த பொருளறிந்
துஞ்சி டாமற் றுரிதமா யூதிடே. 50

ஊத ஊத உன்னுக்குட்ப்ர காசமே
நாத விந்து நடத்தைய றிந்திடில்
வாத சித்தி வருமோரா ண்டினிற்
பேதம் வாராப் பெருவெளி மூலமே. 51

மூல மான முனைச்சுழி நிர்மல
வாலை குண்டலி வச்ரக் குகையினிற்
ஞால வாசி நகாரம் ப்ருதிவியில்
ஆல நாடி அடர்ந்து முளைப்பதே. 52

அடர்ந்து நாடியிற் சோதிப்ர காசமே
நடந்து வாசி நயனங்கீழ் வாசியிற்
படர்ந்து மேபன்னி ரண்டுமீ ரெட்மொய்க்
கடந்து சோமன் கதிரவ னாகுமே. 53

கதிர்மு னைச்சுழி காரத்தைப் பற்றிடும்
மதிர விமலம் வாருதி யாகிடும்
விதியி ருந்து விளங்கிடும் வாசியுந்
துதியும் ஞானச் சுகாதீதம் பாருமே. 54

ஏழாவதாண்டு.

துதியு மாறு சுகங்கண்டு ஏழினில்
நதியின் மூலம் நளினமொன் றாகியே
நிதியு முப்பு நிறுத்துக் கடுகுவை
கதியுங் கற்பங் காலையாலை யுண்டிடே. 55

உண்ண உண்ண உனக்குள்ப்ர காசமே
எண்ண எண்ணவெட் டெட்டுமெ றியலாம்
பண்ணு நூல்மறைப் பாஷையிரெட்டதும்
மண்ணும் விண்ணும் மருவிநின் றிடுமே. 56

மருவ வும்மதி மாய்கைய கற்றிடும்
உருவ றிந்துட லுன்னுடல் காண்கிலார்
திருவ றிந்து செகசால மாடலாங்
குருவ றிந்து குளிகைசெய் வோர்களே. 57

குளிகை என்ன குருவென்ன வாசிதான்
வழிய றியார் வழலைப்பெ ருமைதான்
அழிவ தில்லை யகாரவு காரமாங்
கழிவ துண்டோர் கருவறி யார்களே. 58

கண்ட பேர்சிலர் கண்டுங்கா ணார்சிலர்
உண்ட பேர்சிலர் உண்டுமுண் ணார்சிலர்
விண்ட பேர்சிலர் வெற்றிகொண் டோர் சிலர்
அண்ட பிண்ட மறிந்தறி யார்களே. 59

அறிதல் வாத வயித்தியஞ் சித்தியாங்
குறியும் யோகக் குளிகைச்சித் தாவதும்
நெறிமெய்ஞ் ஞானம் நிலைத்திடுந் தத்துவம்
பிரிய மாஞ்செகப் பெண்மயல் தள்ளிடே. 60

மாயா சித்தியா மற்பம ணிதரும்
ஓயா வாசியி லூதிடுஞ் சாயனுங்
தோயா வெண்மதிச் சோதிவி ருட்சமுஞ்
சாயா விருட்சமுந் தன்னுக்குள் ளறிவதே. 61

தன்னைத் தானேசா தித்துக் கண்டோர்கட்கு
அன்னை தன்னுள நிந்தமு தூட்டுவாள்
உன்னு ளுசந்துணின் றுடிடு மாறினில்
முன்ன மேமொழிந் தூதிடும் வாசியே. 62

வாசி நின்று வளர்பிறை யானதால்
மாசி லாமதி மாலின்ம யத்தினுற்
காசினி யோர்கடி கைக்குள்ளே போகலாம்
நாசி நுனியில் நாடித்து தித்திடே. 63

நாடுங் கற்பம் நபந்திரு நாளினில்
ஆடுங் காயமைங் காயமுஞ் சித்தியாஞ்
சாடுமாரணத் தைலமி றக்கலாந்
தேடு மூலப் புளியின் செயலதே. 64

செய்கையு மூலப்பு ளிச்சுண்ணங் காரநீர்
வைகைய தாமதி வாருதி நீர்ச்சலம்
வெய்கையு மாஞ்செய நீரைவிட் டப்பதம்
பையநீ சாடிப் பகர்வத றிந்திடே. 65

அறுசு வைச்செய நீரதைக் கொண்டபின்
மறப்ப டாமல் மதியைவிட் டாட்டியே
குருக வும்புன்னைக் காயள வாகிடில்
இருத யத்தினில் மேலும்வி ளங்கிடே. 66

மேல தாகிவி ளங்கிடுங் காலைதான்
வாலை யாய்வடி வாகும்வ யதெனும்
வாலையிவ் வித மாறிவ ருகையிற்
றால சூக்ஷ்மசு காதிதங் காணுமே. 67

காணும் யோகக் கருத்தறிந் தூதிடத்
தோணும் ஞானச் சுயம்புலிங் கேசரே
தூணு மேதூரும் பாகிடுந் தூணதாம்
வேணு முப்பு விரும்பிடுங் கற்பமே. 68

கற்ப சாதனை கைவச மாகிடில்
அற்ப தேக மதுவஜ்ரத் தூணதாங்
தற்ப தாவர சங்கைய றிவதுஞ்
சொற்ப மல்ல சுடரொளிச் சூட்சமே 69

சுடரனந் தஞ்சிவ சூக்ஷமச டாதாரம்
உடனறிந் தேயோக சாதனை யுண்மையின்
கடனபொற் பதகம லாலயஞ் சூழ்மதிக்
கடவுளின் பதசுகக் காட்சியைப் பாருமே. 70

பார்க்கப் பார்க்கப் பரப்ரம்ம ரூபமாய்க்
கார்க்கச் சற்குரு கற்பமெட் டாண்டினிற்
பூர்க்கு மாற்றுப் புகழிரு நாலதாம்
ஆர்க்குந் தோணுத திசய மாகுமே. 71

ஒன்பதாவதாண்டு.

அதித வாசிய றிந்தொன்ப தாண்டில்
விதிம றைப்படி மேற்கண்ட தாரையில்
மதிம லர்த்திரு மாலின்த ரிசனங்
கெதிபெ றுஞ்சிவ கெவுனங்கொண் டேறுவாம். 72

கெவுன வாசிவா வாவெனக் கேசரி
மவுனங் கொண்டு மதியமு தம்உணர்
புவனம் பாயப் புகழ்கண்ட தாரையிற்
கவன மாய்க்கருத் தங்கனங் காருமே. 73

காரு மேகலை யாமலவ் வாசியைப்
பாரு மேரத்னம் பார்க்கப்ப ழக்கமாய்
தேரு மேனிலைத் தொன்பதுஞ் சென்றதாற்
சீரு ஞானச்சி வசத்திக் கூறதே, 74

சத்துசித் தஞ்செக சர்வலோ காதிதஞ்
சித்தி பெற்றுத் தசதீக்ஷை யுடையராய்
வெத்தி யோகமெய்ஞ் ஞானவ சியமாஞ்
சுத்த வானுப்ச் சுகம்பெறு வார்களே. 75

பத்தாவதாண்டு.

சூகாதி தம்மெனுஞ் சூக்ஷக்க ருவறிந்
தாகாச பரியந்த மட்டசித் தாடுவான்
யூகாந்த காலத்தி ஞெருகோடி நாள்வரை
ஏகாந்த மாந்தச திட்சையைப் போற்றுவாம். 76

திட்சைபத் தாலுயர் தேகம்வ லுந்தது
மோட்சசு காதித முப்பாழுங் கண்டது
சாட்சியின் னூல்சக லமுமொ ழிந்தது
காட்சியும் பெற்றுக் கனம்பெறு வார்களே. 77

மூலிகைக்ளின் வகை

பெத்த பேறு பிறவியொ ழிந்தது
பத்து மாற்றுப் பசும்பொன் விளைந்தது
உத்துப் பார்க்க உருவெளி யாச்சுது
சித்த ரான செபலறிந் தோதுவாம். 78

ஓதுஞ் சித்த ருலாவும்பொ திகையிற்
சோதி விருக்ஷஞ் சுணங்கவி ருக்ஷமும்
பூத விருக்ஷம்பொற் கள்ளிபொற் றுமரை
வாத மூலி வளர்கரு நொச்சியே 79

கருதுஞ் செந்திரு கற்றுழை யிற்செழும்
பெருதும் வெண்துத்தி பின்னுங்கை யான்கரு
அருதும் நீலக்கொ டிவேலி சிந்தியுந்
துரிதம் வெண்கண்டங் கத்திரி தோணுமே. 80

தோணுஞ் செங்கள்ளி துவர்கொடி வேலியுங்
காணுங் கருத்துங் கதிர்மூலி கையுடன்
பூணும் ரோமம் புகழும்வி ருக்ஷமும்
ஈணுங் கதலி யிதுகறுப் பாகுமே. 81

கரிய வாம்பல் கருப்பாமா தண்டையும்
பிரிய செங்கோவை பெலத்தகி கைப்பூடும்
புரிய தோர்நிலப் புறண்டி கருநெல்லி
அரிய தோரமு கன்னிவி ருட்சமே. 82

தோற்றுந் தோற்றுந் தொழுகண்ணி விருக்ஷமுஞ்
சாற்றுஞ் சாயாவி ருக்ஷத்தின் நேர்மையும்
பார்த்த பேர்கள் பரியேம கற்பமாங்
கார்த்தெ டெங்காய சித்திக்கு கந்ததே. 83

வேறு.

காய சித்திக்கு றும்மிரு பத்தேழுங்
கற்ப முண்டு தசவாண்டு சென்றபின்
தூய மூலியொவ் வொன்றொரு பக்ஷமுஞ்
சுத்த மாகச் சமூலமாஞ் சூரணம்
நேய மாயிரு காலையு மாலையும்
நின்று மேபனங் கற்கண்டு பத்துக்கொன்
ருயச் சேர்த்து அதனையுட் கொள்ளவும்
ஆன பின்னதி ஞட்டத்தைப் பாருமே. 84

வேறு

பாருஞ் சோதிவி ருக்ஷத்தின் பாலதை
நீரு மேபலம் நேரிடை யஞ்சதாம்
வாரு பீங்கான் றனில்விட்டு ணர்வதாய்த்
தீரு மம்பிகை சீர்பாதம் போற்றிடே. 85

போற்று வாய்புக ழும்பிகை பாதமே
ஏற்று வாசி யிடபிங்க லையதில்
மாற்றி யூதிநீ வங்கென்றி ருத்தியே
போற்றி யப்பரைப் பாதம்பு கழ்ந்திடே 86

பாதம்ப ணிந்துபால் பாகமாய்க் கொண்டிடு
வாத மெண்பதும் வாருதி புக்கிடும்
ஓதும் பித்தமொ ளிந்துநாற் பத்திரண்
டேது சேத்தும மிருபத்தொன் றேகுமே. 87

எழுபத்தீ ராயிர நாடிநரம்புகள்
அழுந்தி யேமம துபோலி றுகிடும்
விழுந்தி டுஞ்சட மென்மேலு மழுந்திடும்
எழுந்து போம்வினை யிருவினை யில்லையே. 88

இல்லை யேநம னிப்பாலை யுண்டிடிற்
றொல்லை யில்லாச்சேர திவிரு சுஷத்தின் கீழ்
கல்லு மேகர டில்லாச் சுவஸ்தமாய்
வல்லாம் வஸ்த்ரம டித்ததின் மேலேறே. 89

இருந்து மேற்படுத் தினியுன்ம னிதனுய்
பருந்து பாசிப் பயர்பச்ச ரிசியும்
அருந்த வமறி யாதாரின் னிர்ணயம்
பொருந்த வாகாப் பிழைவராக் காய்ச்சிடே 90

வாத பித்தசி லேத்ம சுரமது
தாது பற்றிச் சடத்திற்சு வாலையாங்
காத டைத்துடன் காந்திசெ மூமையாஞ்
சேதம் வாராச் செவியும டைக்குமே. 91

வேறு

தேக மூச்சிபு ருவத்தின் மையமும்
ஆக மதன்கீழ மார்பதன் மையமும்
ஓலதின் கீழ்நடு வுற்றிடும் நாபியிற்
சூலை *கட்டிச் சுரதோஷந் தோன்றுமே. 92

தோன்றி டுஞ்சட மாதிதஞ் சூழ்ந்திடின்
நீண்டி டும்நெடுஞ் சங்குப்ப மமதாய்
மூன்றி டுமூன்றே முக்கால துகடி
தாண்டி டாமற் சலசஞ்சி யூட்டிடே. 93

தாண்டி டாதிரு தாளைப்பி டித்திடும்
வேண்டித் தந்தமு மேல்கிழொன் றுகிடுங்
தாண்டிக் கிட்டித் துடர்ந்துடன் வாங்கிப்பின்
னூண்டி யோர்படி யூட்டியு பாயமே. 94

ஊட்டிப் பார்க்கவு டைந்துமே கட்டிகள்
காட்டி லேகுங் கனதுர்க்க வாசமாய்
மேட்டி யாயுடல் மேலாஞ்ச வுக்கியம்
நாட்டி யேநாக தாளிய ரைத்திடே. 95

தாளி யானத ழையைய ரைத்துடன்
கோளில் லாமற்கு ழைத்துச் சடமெல்லாம்
பாழில் லாமற் பதமாய் நதிதனில்
நாளில் லாமல் நயந்து குளித்திடே. 96

நயந்து இவ்விதம் நாடினுற் றேகமும்
மயமுங் காயமா மாசித்தி யாவராய்ப்
பயமு நீங்கும்ப தினன்கு லோகமும்
நியம மாகி நிலவொளி வாகுமே. 97

நிலவு போல்விழி நீளொளி வாகிடுக்
துலவு அஞ்சனஞ் சோதிப்ர காசமாய்
வலுவ தாகிடும் வாதவ சியமுங்
கொலுவ தாய்ப்பரை கொஞ்சுவாள் பாங்கிலே. 98

பத்து மாற்றுப் பரியேமத் தேகமாஞ்
சுத்த ஞானச் சுடரொளித் திபங்காண்
அத்தன் பாத மநுதினம் போற்றியே
இத்த லத்திலென் ஞளுமி ருப்பரே. 99

எண்சாண் தேகமெ ழுகுவச் சிரமதாம்
உண்மூ லத்தின்மூ லாக்கினி மீறிடும்
மண்ணும் விண்ணும் வளர்பிறை யாதலால்
அண்ண லாதியன் பின்பதம் போற்றுவாம். 100

வாசஞ் செய்தல் மதிரவி கற்பினை
நேசம் பூரணம் நேர்மை நெறிகளாற்
பூசி தப்பரி பொன்சொரூ பங்களை
வாசி யினல்மய மாற்றம திவரே. 101

மாறி மாறி வசியஞ்செய் வாசியால்
ஏறி யேறி யிடகலை பிங்கலை
மீறி மீறி மென்மேலுஞ் சுழிதனில்
வீறி வீறி விளங்குவ தென்பதே. 102

தென்பொதி கைவளர் தேசிக னூர்முனம்
அன்பருக் கன்பரா யறைந்த மொழிதனைப்
பொன்போலும் நல்லபு லத்தியர் சொல்லிய
இன்பமாம் ஞானமுன் னூறும தீதமே. 103

அதிக சோதிவி ருக்ஷத்தின் பாலினில்
விதிய தாகமென் மேலுமு றைப்படிப்
பதிவ தாய்ப்பரம் பத்துப்பத் தாயிசை
மதியி றங்குதல் மார்க்கம தாகுமே. 104

மார்க்க மாய்மதிப் பாலுமேல் கீழதாய்த்
தீர்க்க மாகத்தி கட்டாமல் முட்டியே
சேர்க்கை யாகத் தெளிந்துமே கீழுடன்
பூர்க்கச் செந்தணற் போட்டெடுத் தாற்றுமே. 105

ஆத்தி டப்பத மையஞ்சு மாற்றதாஞ்
சூத்தி ரம்ஆகுஞ் சுணங்கன்வி ருக்ஷப்பால்
போற்றி டும்முன் புகழ்ந்தநற் செய்கைதான்
மாற்ற திகம யமென்ன பாருமே. 106

மயம தீதம்வ சனித்த மூலிகள்
சுயம தாகிடுஞ் சூக்ஷ்மநூ லாயிரம்
நியம மீதென நோறிந் தோதினேஞ்
செயல தீதச்சித் தாடலாம் பார்த்திடே. 107

ஆடு மூலிகை யட்டமா சித்தினைத்
தேடு மின்னூல் செகத்தி லரிதிதை
நாடி னூல்வேதை நாங்கள ருளிய
கோடிக் கொன்று குவலயத் தோர்களே. 108

கோடா கோடி குருமுனி வாக்கியர்
தேடா மற்றேடித் தியங்கினர் மாணவர்
நாடி நாடி நயந்துரு வாகிய
மேடி மேட்டி மிகுத்தான் னூலிதே. 109

இன்னூல் கற்பமெ னுமொரு முந்நூறும்
முன்ன மேமுடி வாயிரம் பார்சரி
தன்ன மேயரு ளம்பிகை பொற்பதஞ்
சொன்ன ஞானச் சுருக்கமு டிந்ததே. 110

சுருக்க ஞானச் சுகாதீத சூத்திரம்
பெருக்க வாழிப்ரா ணாலயஞ் சூழ்நகர்
குருக்க ளாசான் குறுமுனி வர்பதம்
உருக்க மாயுட னற்பதம் வாழ்த்துவாம். 111

கடைக்காண்டம்

முற்றுப்பெற்றது.